பூட்டுசிலையம்பினுன் வாட்டுவேனென்னவப்புன்மைவேட்டுவனைவன்னி
யோட்டமதரந் துடிப்பச்சினந்தெம்மிடையுறைந்தமான் பேட்டைநின்
[கண்
காட்டுவது கடனன்று வந்தவழிதேடெனக்கண்சிவந்துகிராசனும். (௧0)

கலிவிருத்தம்.

வில்லெடுத்தடர்கணை விரைவிற் பூட்டியே
கொல்லுவனென வருகுறுமவ்வேலையி
னல்பொருள் செல்பொருளனைத்துந்தானெனப்
புல்லனல்லறிவுடைப்பூதநாயகன். (கக)

பற்றறுபத்தர்கள் படரெலாந்தனக்
குற்றதுபோல வந்துதவுகாரணர்
விற்றனைழவில்லவனேசர் வேங்கையாய்ப்
பற்றவுமுருக்கொளப்பயந்துவேடனும். (கஉ)

கண்டகமயங்கியுட் கலங்கிவேகமா
யண்டர்தம்பிரானுறைந்தமருங்கோயில்சென்
றெண்டியபயத்தினலோடலன்றியே
தண்டழைக்கூவிளத்தருவிலேறினன். ... ... (கங)

சித்திரகாயமாந்தேவதேவரு
மத்தருவடியினிலமர்ந்திருந்தனர்
புத்தியில்வேடனும்புலிப்பயத்தினு
னித்தியமிதுவெனநினைந்திருந்தனன். ... ... (கச)

---

* குரங்கு-மிருகத்தின்பொது.

இவ்வகைப்பகன்முழுதேகிப்பூதலந்
தெளியதிசிவரக்கண்டுவேட்டுவன்
வெளியதைமுழுகமறைத்தல்கண்டபின்
றிவ்வியக்கிளிதனைச்சிதைத்தெறிந்தனன். ... (௧௫)

ஷை வேறு.

எறிந்தபைந்தழையாவும்வியாக்கிரஞ்
சிறந்தகோலச்சிவன்முடிமீதுற
நிறைந்தயத்தினநிர்மலன்கங்குலா
யுறைந்துகண்டுயிலூணுமகன்றதல். ... ... (௧௬)

ஈசர்தண்புறமிச்சிவன்கங்குல்செய்
பூசையாகிப்பொலிந்தனமேனிசி
மாசகன்றெளிவைகறையுற்றிட
வாசவேடனுக்காயுருமிற்றதே. ... ... (௧௭)

அந்தவேலையிலந்தகன்வாயிலி
னைந்தநந்தியாற்றகைவதுமின்றியே
வந்தவேட்டுவன்மருங்கிலணைந்திட
வெந்தைவில்வவனேசருந்தோயமாய். ... ... (௧௮)

ஷை வேறு.

மறமிகுத்தவிவஞ்சகனையப்
துறைவதியாதெனவுமுனைவையாயுரு
மறைதவிர்க்கித்தன்வடிவுகொண்டிகை
யுறைபுந்தண்டிடனுருக்கெழுந்தனன். ... ... (௧௯)

ஷை வேறு.

எதிர்க்கிடுங்காலயினிறைவர்கைத்தண்டையுங்
கொதித்தசெந்தழலெனக்குலவுமுக்கண்ணையும்
வதைத்திடுந்தொழிற்கொடுமறலியுநோக்கிமெய்
பதைத்துவெங்கதிர்முனம்பனியையொப்பாகியே. ... (௨௦)

வஞ்சிவிருத்தம்.

நிமலராலயநீங்கியே
யெமனுமோட்டமெடுக்கவே
நமனெனப்புகழ்நந்தியை
விமலர்சீறிவிரும்புவார். ... ... (௨௧)

தண்ணளிக்கொருதாவெனப்
புண்ணியத்திரள்பொருந்தியே
பண்ணுபாதகம்*பார்த்திடு
மண்ணலார்நமதாலயம். ... ... (௨௨)

ஆனதாலிந்தவாலயத்
தினனுமியமன்வர
வேளிருந்தனையென்றரன்
மானந்தியைவழுத்துமுன். ... ... (௨௩)

நந்திமெத்தநடுங்கியே
நொந்துகிட்டிசைநோக்கியே
விந்தைநெட்டுயிர்வீசவே
வந்துசேனைகண்மறலினைய. ... ... (௨௪)

பொருத்துமிருதலைபூட்டியே
யிருத்திக்குரங்கினையிழுத்தல்போற்
றிருப்பிறைசொர்ந்திரத்திலே
விருப்பமுற்கொடுவிட்டதே. ... ... (௨௫)

ஓங்குமுயிர்தலிலோடவும்
வாங்குமுயிர்தலில்வருகவும்
நீங்கொடென்புகள்சிதறவே
யாங்குநான்குண்டலைந்தனன். ... ... (௨௬)

அலையுங்காலையென்புரா
மிலகுமோர்சனமின்றியே
சலகம்விளைநரகம்மெலா
முலசலின்றியொழிந்ததே. ... ... (௨௭)

மறவர்வருவதுமாறியே
யறவர்மறவரெலாமொன்று
யுறுதியாகி*யுயர்நிலை
யுறைதல்கண்டேழிலும்பர்கோன். ... ... (௨௮)

விந்தையென்னவியர்துமேற்
சிந்தையுற்றகஞ்செய்பவர்
முந்துநற்றவமுழுதுவோ
ரிந்தவுலகிலியைந்ததால். ... ... (௨௯)

மறலிபடைமடிவான்றோ
மறலிதான்மடிவானதோ
வறிகுவோமெனவமரரோ
டிறையயன்புரமெய்தினன். ... ... (௩௰)

*உயர்நிலை தேவருலகு

கேளு முனிவர்களே இந்த வில்வாடவீசருக்கு, வியாக்கிரநாதரெனப்பெயர்வந்ததைச் செப்புகின்றனம். முன்னம், பாஞ்சாலதேயத்தில் குசநாப நகரில் மறையைக்கரைகண்ட தவநிதியென்னும் பிரமசாரி, இளமையிற்றுறந்து யாத்திரைசெய்து பலதீர்த்தமாடிக்காவிரிநதியைக்கண்ணுற்று மகிழ்ந்து மங்களஸ்நானஞ்செய்து வெண்மடிவிபூதிருத்திராக்கந்தரித்து நித்தியானுட்டானமுடித்து இரத்தினமிழைத்த சிகரமிலங்கும் வில்வவனத்தாலயத்திற்சென்று சர்வரட்சகிபாகனைப்பணிந்து அங்குதவஞ்செய்துகொண்டிருக்குங்காலத்து, நல்வினைப்பகுதியாலவ்வாலயதீபத்தைக்கண்ணுற்ற, ஓர் வேட்டுவன் அவ்வனத்தில் வேட்டையாடும்போது, ஓர் மான் பயந்து, அங்குதவஞ்செய்யும் வன்னியைச்சரணடையக்கண்டவேடன் இம்மானைவிடாயாகில், உன்னையிச்சணைக்கிரையாக்குவனெனக்கிட்டும்போது பத்தர்களைரட்சிக்குஞ் சிவபெருமான் வியாக்கிரவுருவங்கொண்டுவரவே கிராதன் பயந்து ஆலயத்தோடி ஓர்வில்வமரத்தேறினன். வியாக்கிரமூர்த்தொடர்ந்து, அவ்வில்வமரத்தடியிலமர்ந்தது. பகல் நீங்கி யிரவுதோன்ற, முகத்தைமறைத்த கிளைகளையுறித்தெறியவே, அவ்வில்வம் வியாக்கிரவுருவமாகிய சிவபெருமான்றிருமுடியில் விழ, அத்தினம், சிவநிசியானதாலும், அவ்வேடன் ஊணுறக்கமில்லாதிருந்தமையாலும், அன்பர்செய் பூசனையினும், அதிகமாகப் பொலிந்தன. அன்றுவைகறையில், வேடன் வாணாளிறுநதால் தென்றிசைக்கிறைவன், நந்தியெம்பெருமான் தடையின்றி வேடன் மருங்குசெல்ல, வில்வவனேசர்கோபங்கொண்டு, வியாக்கிரவடிவம் விட்டுக்கையிலோர்தண்டங்கொண்டு வரக்கண்டவியமன், இரவியைக்கண்டபனியெனப்பறந்தோடிவிடவே, அங்குபுகழ்ந்து நின்ற நந்தியைப்பார்த்துப் பாதகம்போக்கும் சமதாலயத்திவ்வஞ்சகன்வர, ஏன் பார்த்திருந்தனையென நந்திப்பிரான் நடுநடுங்கி, கீழ்த்திசைநோக்கித் தனது சுவாசத்தையோட்டி, அவ்வியமனைப்பந்தட்டபடுத்தி நாசிரந்திரத்திற் சொணர்ந்தும் திசையினந்தத்தோட்டியும், குரங்கையிழுத்தல்போல் நூறுவருடமிழுப்புண்டலைந்து கொண்டிருந்தபடியால் யமலோகத்தொருசனமின்றி நரகம் பாழாகிப் பாவபுண்ணியஞ்செய்தவர் வேற்றுமையின்றிச் சுவர்க்கலோகங்குடிகொண்டதைத்தாங்கமுடியாமல், இந்திரன் அதிசயமுற்று இப்படியுண்டாகக் காரணமென்னையென்றையுற்றுத் தேவர்கள் சூழப்பிரமலோகத்துக்குச்சென்றனன். என்று கூறிய சூதபுராணிகரை வணங்கியருந்தவர் புகல்கின்றனர்.

இயமன் கர்வபங்கச்சருக்கம் முற்றிற்று.

ஆ சருக்கம் ரு-று திருவிருத்தம். ௱௩௯.

சிவமயம்.

ஆறாவது இயமன் விமோசனமும் இயமதீர்த்த வும் உண்டாத்த சருக்கம்.

எழுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

எனவிண்டசூதர் முனைமையர் கூடியியல்பாய்வணங்கி மொழிவார்
முனைகொண்டு வெற்றிபெறுவாரவர்க்கு மொழிகின்றதென்னவயனார்
*கனைவந்திறன் மெய்ததைகொண்டலைந்தகாலன் சரித்திரமெனச்
சினைகொண்டெழுந்த தருமீதிருந்த திறல்வேடனென்ன செய்தான். (க)

வருமானையன்பினுடனே புரந்து மகிழ்வன்னி செய்கையெனநீ
விரிவாயெமக்குமொழிவீரெனச்சொன்மெய்யர்க்குரைப்பர் சூதர்
புருகூதனெங்கு மிசைகொண்டுயர்ந்தபோதன்புரத்திலணுகி
வரிகொண்டதங்கமணி கொண்டியைந்தமதில் சித்திரங்கள்சிகரி. (உ)

மணிமந்திரத்தினவைமண்டபத்தின் மகிழ்சிங்கஆசனமிசைமேற்
கணிசித்தர் கின்னரரியக்கர் வீணைகருடரா வணங்கமணியா
ரணியாயிழைத்த புல பூணிலங்குமருள்வாரணிசேருமயனைப்
பணிசெய்து சிந்தைதனிலேயுகந்துபரிவாகநின்றுமொழிவான். (ங)

இசைதாபரங்களடைசங்கமங்களியாவும்படைக்குமிறைவா
மசமாமழுத்தவருமாலறத்தவருமென்புரத்திலுரலால்
வசிகொண்டதாதரெரடு காலனருமடிவானதோவிமறைவ
நிசமாய்வழுத்துமெனும்வாசவற்குநிறைவேதபோதன்மொழிவான். (ச)

இதுநீயுரைப்பவறிகின்றதன்றியிதன்முன்னம்யாதுமறியேன்
றுதிமாயனுரை வகையாகவிண்டு சொலுவேனெனப்பின்னுடனே
யதிவேகமாகமுனிவோர்கள்சூழவமரேசனோடுமயனு
ரதிவிந்தையுற்றவைகுந்தமுற்றரியரிமந்திரத்திலணுகி. (ரு)

நவரத்தினங்கள்பதிபித்திசெங்கனகவெற்பெனுஞ்சிகரமு
முவமைக்ககன்றவுயர்தோரணங்களொலிமண்டபங்கள்புடைசூ
ழவைமண்டபத்தினரியாசனத்தினவிர்மின்னலுற்றமுகில்போற
*சிவமேமிகுத்ததிருமேவமிக்கதிரிலோகமெச்சுமிறையாய். (சு)

முடிகுண்டலங்கடகமங்கதங்கண்முதலான்கலன்கள்பதும
வடிசங்கமாழிகதைசிந்துவாரம வனாநாதகங்கள்பொலிய
வடிவஞ்சிறந்ததிருமாலையன்புவலகைகொண்டுகண்டுநயமாய்ப
படிதண்டமென்னவெதுதண்டனிட்டுபயவங்கைசென்னிபுறவே. (எ)

---

* கனைவது-ஒலிக்கிறது.

* சிவம்-நன்மை.

துதிசெய் வராதி நாராயணுபதுமமாவனைந்த பொருளே
மதுரங்கொள் கானநிறை நாரதாதி வரஞானபோதர் மகிழ்வோய்
மதிசேருறத்தவருமுலகத்தவருமீள் சுவர்க்கமுறலான்
வதைகொண்டனுதயோகொலஞருமடிவான தோவிமறையை. (௮)

தெளிவாய் விளம்புமெனும் வேதனுக்கிகமான் மகிழ்ந்து மொழிவார்
வளர்வேதவிந்தமன்றயநப்தஞ் செல்வதனுக்கியாதுமறியே
மளியார் சரீரனெல்லாமுணர்ந்தவரந்த விந்தையறிவார்
விளையுங்கலாபமலர் பூவினெய்தின் வெளியாகு மங்குசெல்வேம். (௯)

எனவந்ததேவரிறைவேதனையரிவரோடுசென்றுகைலைக்
கனகஞ்சிறந்த மதின்மண்டபஞ்சிகரசோபுரம் பரிகமும்
பனைசண்பகங்கமுகுவஞ்சிபுன்னைபனசங்கடாரைவகுளங்
கனிகொண்டசூதமந்தாரைசற்பகமரம்பைநாளிகேரம். ... (௧௦)

உயர்ந்தோங்கு வில்வமரமும்பராகமுறைபுட்பநந்தவனமுங்
கயமோடைவாவிகதிகூட கோடிகமலஞ்சிறந்த சுனையு
மியைவிந்தைக்கண்டவுயர்புன்னதத்தினிலகுங் நவட்டுமுடியில்
வைரஞ்சிறந்தகுடமோங்கியத்து வசதோரணப்பவனமேல். ... (௧௧)

உதையம்பொலிந்த கதிர்கோடி சூழுமொளிர்சங்கமண்டபமிசை
மதர்கொண்டிலங்கு நவசத்திசூழமணிபொங்கு சிங்கவணைமேற்
றிதிமைந்தரண்டர் வர்மங்கை மார்விசிறிசாமரங்கள் சிவிறப்
புதைகொண்டு சாதைசனகாதி யோகர்புத்தேளனேகர்புகழ. ... (௧௨)

நளிர்பொங்கு கங்கையலைவீசி யெங்கு நனைகின்றசெஞ்சடிலமும்
விளரிந்துறைந்த முடிமுச்சுடர்ச் செவ்விழியுங் களங்கமிடறு
மிளமந்தமானநகைகொண்டு சோதியெயிறொன்றுகின்றவிதழு
மொளிர்குண்டலங்கட்சமங்கீதம் பொன்னுபவீதமாதிகலனும். ... (௧௩)

எழிலாய் விளங்க விடையந்தமாதியில்லாதகத்தநித்த
னழியாதநன்மையமைவன் பிருகியானந்த ரூபனமல்ன்
றழைகின்றவேதமுடிகண்ட நம்பன் சகமேனியண்டரண்ட
முழுதும்பராவு மகளங்கமானமுதல்லான் விதிக்கு விதியன். ... (௧௪)

இறையென்றியம்பு முமைபாகர் பாதவிணைகண்டுகேந்துநெடுமா
னிறையன்பினோடுதுதிவிண்டு தண்டனிகராயிறைஞ்சிமுடிகை
யுறவைத்தளிக்கனானந்தமாரியுகநன்னயத்தினுடனே
யறைகின்ற வாணிமெதுவாய் நடேசரறியும்படிக்கு மொழிவார். (௧௫)

அமரேசமூற்று மதிசங்கராவரசதாசிவாகருணையாய்
தமனீயவிற்கைமகதேவதீனசனபாலனெமிறைவா
நமராமறத்தினருமாவகத்தின்று நீள்சுவர்க்கமுறலால்
விமல்கொண்ட தூதரொடுகாலனும் விளிவானதோவிமறையை. (௧௬)

புகலென்றறைந்தபுயல்வண்ணர்சிந்தைபுகழும்படிக்குமொழிவா
ரகமிஞ்சிநந்தமடியாரிடத்தினபராதமுற்றவகையா
லிகனந்திவீசியெறிநெட்டுயிர்க்குளிசிகொண்டு நூறுவருடந்
தகைசண்டனுய்யவகைசெய்வநீர்சதிர்மந்திரத்திலடைமின். (௧௭)

இவ்வாறுரைத்தபரமேசர்பாதவிணைகண்டிறைஞ்சிநெடுமால்
செவ்வாய்மலர்ந்துதுதிசெய்துகந்து திருமந்திரத்தனுருமு
றைவாதசத்தியரனுருவைக்கவுடனந்தியமனைவிடவே
யவ்வாறைவிட்டவனும் வில்வநாதரடிமீதிறைஞ்சியவர்முன். (௧௮)

நளிர்நின்மலங்கொடமொன்றுகண்டுநமதீர்த்தமென்றுபெயர்வைத்
தொளிகொண்டவந்தநீராடி வெள்ளையுடைபூதியக்குடிணிபூண்
டளிகொண்டவில்வவனவாலயத்தினகமண்டியங்களுறையுங்
கிளைகொண்டவில்வவனநாதர்முன்பு கெருவந்தவிர்ந்தகதைபோல். (௧௯)

தொழுதஞ்சியங்கமயிருஞ்சிலிர்ப்பதொடரன்புகொண்டுவுளமெய்
முழுதுங்கனின்றவானந்தவாரிமுழுகும்படிக்குவெருவக் [ய்
குழையொண்பணிப்பிணிருசெங்கைகொண்டுகுழையப்புடைத்துவுழையா
மொழியுந்தளர்ந்துதுதிசெய்துநம்பர்முனநின்றுகொண்டுமொழிவான்.

கலிவிருத்தம்.

நதிசேர்தவர்மனமார்சகநாதா பரநாதா
சதிராகிய பரைநாயக சசிசூடியமுடியா
விதிகூறியமறையின்முடி விள்ளுங்குருவுருவா
துதிசேரயனரிதேடிய சுபமார்பதமுடியா ... ... (௨௧)

விச்சுவவதிகாசௌரிய வீரியவதிபோதா
மெச்சியமந்தாகினியலை வீசியசடைமுடியா
வுச்சிதவரைமகள்வந்தணையுந்தாபரனேமு
னச்சமில்லாமற்கடுவிடமணியுங்களவரனே ... ... (௨௨)

அயனரியுருத்திரனெனப்படைத்தளித்தழிக்கும்விநோதா
தயைமயமெனுமுருவாதன்தன்றன்தேனுமோருவா
வயவாகனனனலவன் சுடரம்பகபரவனுவே
புயன்மேனியனயனர்ச்சனைபுரியும்பதிச்சா ... ... (௨௩)

மனமாயைக்கணுகாதமகேசாகுணவுருவா
சனனக்கடல்வங்காசுத்தாகுணவதிகாகோ
கனகப்படைமதனைச்சுடுகண்ணுவொளிவண்ணு
கனவாகனர்வழிபாடுறுகாலாதிரிசூலா ... ... (உ௪)

சிவமருள் திக்கம் பரசத்திய வரமயமில்லோய்
புவனம் பரவுசதாசிவபுகழ்சிலாவுயரும்
பவனுதியசிவனே தப்பாவறியாதென்னற்
றவரும்பிழைசதஞ்செய்தினுஞ்சகித்தருண்மகதேவா. ... (உ௫)

இத்துதியளிவாருதியெனவெழின் மேதினிநகரின்
மைத்தவழ்வில்வாடவியிடைவளர்சங்கரர்கொண்டு
கைத்தலமறிமான் விடையொடுகோலன் முனநின்று
ரத்தரிசனவின்பத்தினடிக்கடி தொழுஞ்சமனை. ... (உ௬)

அதிநேயமோடன் பாய்நமதடியானெனநோக்கித்
துதிகொண்டனம் வேண்டுதியென் சொல்லென்றவரனை
மதியுன்னிவணங்கித்திருமாலயனறியானின்
பததரிசனைக்கொப்பாம் வரம்யாதெனநமன்பகர்வான். ... (உ௭)

நின்சன்னிதிமுன்னம்பெயர்தீர்த்தடத்தினிற்படிந்தோர்
பன்னுந்துதியான்செய்ததைப்பகர்ந்தோரிகபரமு
மனனும்படியருளென்னவரந்தந்தனமென்றே
பின்னுந்தயவாய்ச் செலவடிபெயர் சண்டனையழைத்தே. ... (உ௮)

இந்நான்முதலென்னன்பர்களெத்தனையகஞ்செயினு
மின்றுண்மையங்கிவையாது நன்னெறியாய் நடவென்றே
மன்றுகுமிலிங்கத்திடைமறைந்தாரவியமனும்
பொன்றூர்வில்வவனேசரைப்புகழ்ந்தேபுரமடைந்தான். ... (உ௯)

நடுவன்விறலொழிநந்திகுணக்காயினமுறைவார்
வடநீழலினுறைவோர்கதைவைத்தின்னமிலகுவா
ரிடமேவியவில்வாடவியமகுண்டமிதற்குத்
திடமாயுவமஞ்சொலமுச்செகத்திற்கிடையாதே. ... (௩௰)

இமகுண்டத்தினின் மூழ்கியவெழில் சேர்வில்வவனத்
தமையும்பரனைத்தரிசித்தவரிகபரமடைவா
ரமுதக்கதையாமிதுபடித்தவர் கேட்டவூரன்றி
*யமுதத்தினிலடையார் மூவவணிக்கனுருத்தர். ... (௩௧)

* அமுதம்-மோக்ஷம்.

[illegible]
எமது பவவிருளகற்று மருந்தவச்சுடரே இந்திரனுக்குப்பிரமனு
ரைத்ததும், நந்திப்பிரானுயிர்ப்பிலவியமன், வில்வத்திருந்தவேடன்
மானைப்புரந்தவன்னி இவர்களின் சரிதங்களையும் விரித்துரைக்கவேண்டு
மென சூதபுராணிகர், மெய்யர்களே அவ்விந்திரன் பிரமனைக்கண்டு
வணங்கி உலகம் படைக்குந்தலைவ, யாவபுண்ணியஞ்செய்தவர் வேற்று
மையின்றி ஒருங்குசேர்ந்து, எனது லோகம்வந்து நிறைந்தமையாலிய
மன் மடிந்தனனோவெனப் பிரமன்றெரியாதவனாய், அவ்விந்திரனோடு
திருமாலுலகஞ் சென்று, இலக்குமிகாந்தன்றிருவடி பணிந்து மொழிய
த்தானுந்தெரியாதவனாய் அப்பிரமனிந்திரன் முதலாயினரோடு கைலை
யிற்சேர்ந்து எல்லாமதிந்திருக்கும் பசுபதியின் சரணம் பணிந்து மொ
ழிய, அப்பசுபதிநாதன், மாலின் மயன்மனமகிழ மொழிகின்றனர். அவ்
வியமன் நமதடியானுக்குத்தீங்கிழைத்தமையால் நந்தியின் சுவாசத்தக
ப்பட்டுழல்கின்றனன். அவனுய்யும் வகைசெய்குவன், நும்முலகம்புகு
மினென்றனுப்பி நந்திப்பிரானுக்குத்தரஞ்செப்பவே அவ்வியமன் விடுப
ட்டு சோகந்தீர்ந்து, வில்வவனேசனடிபணிந்து, தன்னால் தீர்த்தமொன்
று கண்டு ஸ்நானஞ்செய்து, வெண்மடி வெண்ணீறு கண்மணி புனைந்து
சன்னிதியிற்றாழ்ந்து ஆனந்தபரவசனாய் ஆடிப்பாடித்தோத்திரஞ்செய்யு
ஞ்சமனைச்சங்கரன்மகிழ்ந்து விடையிற்றோன்றியாதுவரம்வேண்டுமென
வினவ, ஐயனே நின்றுய்யசேவடி சேவிப்பதன்றி யடியனுக்கியாதுவே
ண்டும், நின்னது சன்னிதிமுற்றோன்றுந்தீர்த்தமாடி யெனது துதியை
நவின்றவர்க்கிகபரசுகந்தரல் வேண்டுமெனத்தந்தனம், இந்நாண்முதல்
நம்மன்பர்களியாது புரியினுமங்கு, நினதாண்மைகாட்டலொழியென்று
த்தரஞ்சொல்லி இலிங்கத்துருவாயினர். பின்னரவ்வியமன் பணிந்துத
னது புரமடைந்து செங்கோல்செலுத்தி வந்தனனுதலிலவ்வாலயத்தில்
நந்தியெம்பெருமான் கீழ்த்திசைநோக்கியும், தட்சனூர்த்தம் தண்டுகை
க்கொண்டும் விளங்குகின்றனர். இவ்வொப்பிலாக்கதையமுதத்தைச்செ
ப்பியவரும் செப்பக்கேட்டவரும், அமுதம்பெறுதற்கையமில்லையென்
று சொல்லிப்பின்னரும் புகல்வராயினர்.

இயமன்விமோசனமும் இயமதீர்த்தவரவும் உரைத்தசருக்கம்

முற்றிற்று.

ஆக சருக்கம் ௬-க்கு திருவிருத்தம் ௱௬௭.

உ

சிவமயம்.

ரு-வது

சிவனிராத்திரிமகிமையும் புத்திரனளித்தவரென்னும் பெயர்வரவும் வேடனுக்குமுத்தியளித்தவரென்னும் பெயர்வரவும் உரைத்தசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இவ்வகைச்சூதர்சுமன்கதையாவுமியம்பிமேற்றருவிற்
றௌவியவேடன்சரிதைகேளுமென்த்தயவுடனுரைப்பார்
திவ்வியக்கோயில்விடுத்தியமன்பதிசெல்கவுமுடனே
கௌவியதொண்டர்க்கெளியவர்வில்வகசாவினிறையருளால். (௧)

வேட்டைசெய்வாலையாலயமாலைவிளக்கினைநோக்கி
வாட்டமில்வில்வமரத்திடையேறிவதிந்தவிதத்தன்றி
யீட்டரனிசியினூண்டுயிலின்றியிருந்திடவதுவே
கூட்டுசமாதிபூசனையாகிக்கொடுமைறநீக்கி. ... ... (௨)

ஓங்கியநன்மைவேடனுக்கிரங்கியோகியர்க்கரிதாம்
பாங்குறுமேலாமபதவியினுலாம்பதங்கொடுத்தனரென்
றோங்கவர்க்குரைப்பவொருவருக்கொருவரலர்முகநோக்கித்
தீங்கிலிக்கதையோர்காலமுங்கேட்டதிலையெனவியைந்தே. ... (௩)

அன்பகமலர்ந்துதருச்சனிமூக்கினமர்த்தியம்முனிவர்
தன்புறவங்கத்துறுமயிர்பொடிப்பச்சூதரைநவில்வார்
வன்புறுமனத்தன்சொலைசெய்பொலாதமறவனுக்கறியா
தன்புறுசமாதிபூசையாய்த்துயிலூணன்றியுமமர, ... (௪)

செய்தகந்தொலைத்துச்சிவனருள்புரிந்து[illegible]ங்கொடுத்ததெனக்
கைதையைமுடியானருள்பெறச்சிறிதுகாரணமுளதோ
வெய்தியவேதுவிதுவெனவிரிவரியம்பெனமுனிவோ
மொப்திரட்புனிதக்கதைதனைச்சூதமுனிவரர்மொழிவார். ... (௫)

முன்னொருகோனிரண்டாமுகத்து[illegible]யரெவர
நன்னதித்தடத்தினெண்டிருப்பொலிந்துநாடொறும்வளர
மன்னும்விக்கிரமமென்னுமோர்பெரிதூர்வயங்குமவ்வூரிற
பன்னியவேதமுதறகலையாவும்பயில்வெருமறையோர். ... (௬)

உண்டதிற்சகலவேதசாத்திரமாமுறையின்கலைகளையக்
கண்டுசத்தியமுமுவிரதமுங்கிரமாய்க்காக்குமோர்மறையோன்
மண்டலம்புகழப்புயக்குணமேவுமகனுயர்வரு
ளொண்டருகனிட்டன்சகலமுமுணர்ந்துமுணர்விலனாகி. (௭)

மனைவியைவிடுத்துப்பரத்தையர்போகமனைத்தினின்விரும்பித
தனமணியாடைபாத்திரந்தவசதானியமுதலாய்த்
தினந்தினமொவ்வொன்றுயவர்க்கீந்துதிரிந்திரனாகி
யினர்மனைபுகுந்துணவுசெய்தவனோதனன்பாற்றிருந்தான். (௮)

இப்படிக்களவுக்கிறூயெனத்திரியுமியல்பையவ்வூரின்
விப்பிரரறிந்துவெகுண்டுகொண்டுவந்துவெளியினிற்றுரத்த
வொப்பியதுணைவர்தந்தைதாய்கிளைஞருருமியும்விடுத்து
வெப்பமாயெழுந்துதக்கணதிசையில்விரைவொடுஞ்சென்றே. (௯)

செல்வழிதனிலங்கங்குறைநகரிற்சென்றுபொன்றிருடிப்
பல்வகையவ்வவ்விடத்தினிலிருக்கும்பரத்தையர்களித்துப்
புல்லதுகருமமாயுணர்ந்திலையும்பெருந்தனமெய்யலா
னல்லணங்கதிக்கும்வில்வவனத்திலடைந்ததினடைந்தான். (௧௦)

அத்தினஞ்சிவனிராத்திரியாகியன்னகரயலூர்
மொய்த்தவிப்பிரர்கள்வானவர்விருந்தர்முதன்மடந்தையர்கள்
பத்திரவரசர்வசியர்களேனையபரவியர்வெகுபேர்
பத்தியாயெய்தின்மலப்பிரமன்புகரின்மூழ்கி. ... (௧௧)

தேகமெல்லாம்வெண்ணீறணிந்துயர்நெற்றியின்மிசைமூன்று
ரேகையாய்க்குழைத்துத்தரித்துருத்திராக்கவடப்பணிபூண்
டாகமம்பயிலுஞ்சிவனிடத்திகழுன்புவைத்திரு
சேகரர்வில்வவனத்தாலயத்திற்சென்றடிவணங்கி. ... (௧௨)

தோத்திரம் புரிந்தவ்வாலயத்துறையத்தூயதாய்பகற்போய்
ராத்திரி மருவ நன்னூற்றனைத்திலியல் புடனமைந்து
நேத்திரமூன்றுவிளங்கிய சிவனை நெறியுடனருச்சித்
தார்த்திலையக்கனைந்து துயிலுணவன்றியமருமக்காலை. (௧௩)

சஞ்சயனென்னு மறைவலவனும் வஞ்சகமிகுமனத்தாற்
றஞ்சமில் பெரியோரெனச் சிறந்தயன்றன்றடத்தினின் மூழ்கி
மஞ்சனியாகவுருத்திரனயனமணிபொடிதரித்து
நஞ்சணி வில்வவனத்திறைவனா சன்னிதிதனிற்சென்றே. (௧௪)

வல்லம்வரல்போலவனசந்தகைக்கேதிலையாங்குழலையத்திற்
கலனுமங்குன்றவோர் கையுறை தன்மூங்கிலைகள் பாத்திரமு
மலர்விழியுறங்கும் வேளையன்டைக்க மனத்திலினிலைத்தே
தெரிலைவறுமனைமயிறைவராலயத்தைச் சுற்றியகாலை. (௧௫)

அப்புலத்தொருவனைக்கண்டிலைஞையாலதிருயிலடையச்
சற்பனைச்சோரச்சஞ்சயனென்கிளைமையாதெனவே
யொப்பியோர் குழந்தைக்கழுத்திலோடைக்கொடித்ததின் கலைத்
தப்பிலாதெடுத்தவ்வாலயம்விடுத்தச்சடிதியினடந்தான். (௧௬)

அவ்வகை நடக்கும் வேலையங்குறைவாரார்ப் பரித்ததட்டக்
களவு சித்திரையர்த்தந்தையுந்தாயுங்கண்டுயிலகன்று
செவ்வியாம்பாலன் மடிவுகண்டறிந்திரள்பொழுதயலோர்
மொய்விறலுடையபூசுரனெழுந்து முனிவுடன்றொடர்ந்தே. (௧௭)

தமது சூத்திர நூற்கைசயினுலோடிச் சயம் பெறுந்திருடன்
சமமுறப்பிணித்துக் கரத்திருவடித்துத் தாளிணையுதைத்தே
யனையுமாவய த்திற்றிரும்பவுந்தொணர்ந்தவ்வணிகலன்யாவும்
யமபுரமடையுஞ்சிசுவது தந்தையிடத்தினிலளித்தான். (௧௮)

இரும்பவுணையர் பலர் சினந்தாலத்திருட்டுவிப்பிரனை
நிரம்பவுமடிக்கவொருசிவானந்தரியமியரம் யோகிச்
சுரன்பரந்தடிக்குஞ் சனங்களைவிலக்கிச்சொல்லுவரகத்தை
விரும்பிய வேடவிப்பிரர்க்கதம வெவவினையனுவே. (௧௯)

துன்மதியாய்விப்பிரனென விருந்தர் தொழுகுலச்சிகைவைக்
கன்மதியாயெவ்வகைவதைத்தாயக்கனவகத்திருட்டார்
கன்மமதான்வேட்டுவனெனவிக்கக்கடவெனச்சபித்தார்
தன்மமுறுதசோரவிப்பிரனுந்தளர்ந்தகங்குழைந்து. (௨0)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருள்பெறச்சபித்தமுனிவரனடியிணைடிக்கடிவணங்கியன்பொடுசெனிவா
யிருகரத்தானுங்கவுண்மிசைபுடைத்துமிணைக்கரஞ்சிரம் வைத்திரங்கிய
ம்முனியைக்
கருணையங்கடலேதீனக்குள்கிளையேயகண்ணுதல் வடிவேயெனத்துதித்தடி
யேன்
றெரிவிலனுகிமருளுடன்வினைத்தநீயனுக்கருளின நரவிச்சாபம்.

என்றெனக்கொழித்துசகத்தருமதனையியம்புனையடைந்தமறத்தனைப்புர [ப்பா
யென்றுமின்றிரங்குங்கரவடமறையோனியல்புறயோகர்க்கிறைமனங்க [னிந்து
நன்றுவில்வவனநாதரைநினைந்தன்னவன்றனைநோக்கி நகையொடுநவில் [வார்
தென்றிசைக்கிறைவன்றடக்கினின் மூழ்கிச்சிறந்த வில்வவனத்திறைவ [னையவணங்கி. (௨௨)

அத்தினத்திரவினித்திரையகனமகன்றதிருறுமாலயஞ்சூழ்ந்து
மொய்த்ததீயெனிலுமிச்சிவதலத்தின்முப்பதுதினத்துக்கப்புறமரித்துத்
தத்தியசனனஞ்சவாருயெய்திந்துத்தனைமுத்திமுயிரைவதைத்துழன்றவ [வா
யெய்த்திடுங்காலவிருதிவர்க்குயர்பேயின்னமுமன்மையின்னையவனிசியின்.

நினையறியாதுகண்படையுணவுநீத்தநியமனாநிகழருச்சனையாம் [பா
சனமுறைவில்வவனத்தரித்தலத்திற்கருணையான்மனதுகனிந்துவிட்டனிப்
ரெனமொழித்தன்பின்வில்வவனேசரிணையடிவணங்கியிறைஞ்சியன்பு [டனே
வினையமாய்நயந்துதுதிபொடவ்வுநிர்வி தியர்க்கிறைபாமுனிவராநவி [ல்வார். (௨௪)

சகலமுமறிந்தோய்நேயருக்கெல்லாந்தலைவனே நினைத்தமைப்பரந்தருள் [வோய்
தகவனாதருதனேசராமசாமுறையரிகேசகருணைநிதியே
மகிழ்வொடுவருமித்தம்பதிபுதல்வன்மடிவினுணங்கியமதலைசோகமெனு
மிகவுறுமழலின்றியாத்துதன்றயிரையிருந்தமேகநியென்றெண்ணியிங் [கிறைவா. (௨௫)

ஐயநின்பாததெரிசனைக்காகவாசைகொண்டனைத்தோராருயிர்மறுத்தால்
வையகத்தன்பர் நேயனென்றன்னை வழுத்தியசாமமன்றுவதேவன்றொ [ல்
வெய்யவன்சூழனையடர்மகிதவாவேயன்றவர்களையையவிலக்கியசிவனே
மையிலிவ்விருவர்மடிவதைத்தவிர்த்திம்மதலையையுய்யவைபுரந்தரு [ள்வாய். (௨௬)

இப்படியோகீச்சுரன்றுதிசெய்யவிறையுமவில்வவனத்தரனிரங்கி
யற்புதமதலைக்காருயிரளிக்கவக்கணஞ்சிசுவையவனையயர்நோக்கி
மெய்ப்பரவசத்தோடின்பவானந்தவேலையின்மூழ்கிவிமலர்தன்வடிவை
யொப்புறும்யோகிதனைத்துதித்தப்பாலுனைருங்வகைதயிலுறையவா [ரேத்தும். (௨௭)

அதிசயமனத்தராய்மகவருளுமம்பிகைபாகத்தமாகிவன்றனையுஞ்
சதிர்பெறும்யோகிதன்னையுந்துதித்துச்சமன்றடம்படிந்துசங்கரன்ற
[ளைக்
கதிபெறத்துதித்தவ்வாலயம்விடுத்துக்கனிவுடனவர்களுறைவிடஞ்சேர்ந்
[தார்
வதைமகவளிக்குமவகையினல்வில்வவனத்தரனார்க்குமகவருளீசன் (௨௯)

என்றமுன்யோகிமொழிந்திடும்படியேயியைந்தவேட்டுவனுக்கின்புறு
[ம்வீடு
நன்றுறக்கொடுக்குநடத்தையாலமுதநல்கவலீசரென்றும்வேட்டுவனை
யன்றுகொலவேங்கையாய்த்தொடர்ந்ததட்டியார்ப்பரித்ததனாலடுபுலீயீ
[ச
னென்றுமிப்பெயராகண்மூவகையுலகினிருப்பவரியாருமிசைபெறமொழி
[வார். (௨௯)

ஆதலால்வில்வவனத்தரன்வில்வவடவிசோதான நந்தகன்றடத்துக்
கோதுவமானமூன்றுகாலத்துமுபருமுப்புவியினுரைப்பதற்கரிதாந
தீதறுசிவனிராததிரிசேரிச்சிவகதைகேட்டோர் செப்பினர் புவியிற
காதலார் வித்தைசெய்தனஞ்சேர்ந்துகைகலையிற் சிவனபோலுருவெடுத்தி
ருப்பார். (௩௦)

கௌதம முனிவரகளே, வில்வவிடபியிலேறிய வேடன தவ்வாலயத்தி
ருவிளக்கைநோக்குற்றபடியாலும், அன்று சிவநிசியிலூணுறக்கமின்றிய
ன்பர் போலும், சிவார்ச்சனைசெய்தமையாலும், அவனுக்கு வில்வவனே
சர்மேலாகிய நாமாமபதவியளித்தனரென, முனிவரதிசயித்து, இக்கொ
லைஞனுக்குச்சாயுச்சியநதர, வேறுகாரணமுளதோவென, முன்னம், தி
ரேதயுகாந்தத்தில் ரெவர நதிக்கரையிலுள்ள விக்கிரமமென்னுமூரில்,
சகல சாத்திரமுங்கற்றறிந்த வோர மறையவற்கு, ஐந்து புத்திராகளு
ளர், அவர்களுள், சஞ்சகனென்பவன், மறைமுழுதுணர்ந்து முணர்வில
னாய், பரத்தையை விரும்பித்தனத்தைத்தோற்றுத்தரித்திரனாகி அயல
வர்பொருளை வெளவுதல்புரிய பிராமணாகள் சினந்து அடித்துத்துரத்
திவிட்டமையால், தாய் தந்தையரைவிட்டுத் தக்கணநோக்கித், தங்கு
மூரிற்றிருடி அங்குள்ள விலைமாதருக்களித்துப் புணர்ச்சிக்கவலையிலுழ
ன்றலைந்து முற்றவப்பயன் வநதுற்றதால், வில்வவனம் வந்தனன். அ
ன்று சிவனிரவானதால், தரிசனத்துக்கு வந்த பல தேயத்தரும் பிரம
தீர்த்தம்படிந்து, விபூதி ருத்திராக்கந்தரித்து வில்வவனேசனைப்பூசித்து.
ப்பகல் நீங்கி இரவில், ஊண்டுயிலின்றி யவ்வாலயத்தமர்ந்திருந்தனர்
அவ்வஞ்சகச்சஞ்சகனும், சிவவேடங்கொண்டு நகை மூட்டைகளை யப

கரிக்கரிணைத்துத் திரியும்போது, ஆங்குமோர் குழந்தை கழுத்தைத் திருகிக்கலன்களைக்கழற்றிக் கொண்டோடினன். ஜனங்களாரப்பரிக்கக் குழந்தையைக்காணுத தாய் தந்தையர் கோவென்றலறக் கேட்டவோர் பூசுரனெழுந்தோடிப் பிடித்துக்கட்டியடித்து அணிகலன் யாவும் வாங்கிச் சிசுவின்றந்தைகைக்கொடுப்ப, மற்றும் பலரடிப்பதைச் சிவானந்த யோகியென்பவர் விலக்கி அச்சஞ்சகனைநோக்கி நீ தகாதகாரியஞ்செய்தமையால் வேடனுதியெனச் சபித்த முனிவனைப்பணிந்து இச்சாபமென்று கழியுமென, முனிவன் மனங்கனிந்து, இத்தலத்தின்று ஸ்நானம் வலஞ்செய்து, ஆண்டுயிலொழிந்தனை யெனினும், முப்பது தினங்கழிந்த பினிறந்து வேடனுகப்பிறந்துயிரை வதைசெய்துழல்வாய், பிறகு நின்னிறுதிக்கண் செய்யாது செய்யும் பூசனையை வில்வவனேசர் மகிழ்ந்து முத்தியளிப்ப ரென்றுரைத்துச் சிவபெருமானை வணங்கி, ஐயனே நின்றரிசனைக்குவந்த இவ்விருவர்மடிவைத்தவிர்த்துப் புத்திரர்க்குயிரளித்தல் வேண்டுமெனவேண்ட, அக்கருணைப பிரானுயிரளிக்கக்கண்ட தாய் தந்தைமுதலியோரற்புதமடைந்து யோகியையும் கடவுளையும் வணங்கி ஆனந்த பரவசபட்டு வைகறையிற்றீர்த்தமாடித்தத்தந் தேயஞ்சென்றனராதலின், மகவருளீசர், அமுதநல்கீசர், வியாக்கிரவீசரெனப்பெயர்விளங்கிய வில்வவனேசன், வில்வாடவி, இயமதீர்த்தமென்னுமுச்சிறப்பையு மெடுத்துப் புகழ்தலரிது. இக்கதையைச் செப்புவர் கேட்பவர் சிவசாரூபம் பெற்றுச் சிவானந்தத்தோடிருப்பார்கள்.

சிவனிராத்திரி மகிமையும் புத்திரனளித்தவரென்னும் பெயர்வரவும் வேடனுக்கு முத்தியளித்தவரென்னும் பெயர்வரவும் உரைத்தசருக்கம் முற்றிற்று.

ஆ சருக்கம் ௭-று திருவிருத்தம் ௩௯௭.

௮

சிவமயம்.

எட்டாவது அக்கினிதீர்த்த வரவுச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இலங்குயிச்சிவன்கங்குனதகைத்தனையியம்பினமகத்திரள்விலகு
மலந்தருங்கதிசேர்மகமனைர்தையுடத்தியபலனையுநல்குந்
துலங்குமக்கினித்தடத்துவரவையுஞ்சொல்லுமென்றிதமொடுசூதர்
விலங்குமும்மலமெய்யருக்கின்புறவிரிவுடன்மிகமகிழ்ந்துரைப்பார். (௧)

தலையுகத்தினிலெழுமுனிவோர்களுஞ்சங்கராமனமகிழவேள்வி
நலமுறப்புரிவோமெனக்கோமதிநதிக்கரைநாடிவந்தனுகி
நிலைபெறும்பலவேதசாத்திரபொருணிறைபுமவேதியாகளையழைத்தே
பலயிருதுதிடுமகாதொடக்கினரதிறமையில்ருதுகளுடனகூட. (௨)

ஆங்குவேள்வியைநடத்தியவ்வேள்வினைவிதுபகுவொனிருந்தே
யோங்குமேழ்முனிவரரெழின்மடந்தையருருவுளவனங்களைநோக்கி
வாங்குவின்மதன்கணையனல்வெதுப்பமெய்வாடினன்மனமிகச்சலித்துத்
தேங்கதுப்பதநாளும்கொண்டிடத்திறமுளசோமநினைந்தான். (௩)

அந்தவஞ்சகந்தனை முனிவரரலாமறிவெனுங்கண்ணாலறிந்தே
நந்தயாயினழுசகத்தினைவிருமபியதழலவன்றனைமிகச்சினந்தே
இந்தநாண்முதனிவிறலுடையுடலினைத்திடுவாயெனச்சபித்தா
ரந்தநாண்முதற்பொலிவளவருவினைத்தலலைவுறாத்தியையடைந்தான்.

அப்பொழுதினிலைவாதவத்தெழுமனைவரவனவிடைபுகுநதெரிந்திறைஞ்
சப்பிணமகஞ்செய்தனரதனபலனைசங்கராமனமகிழ்ந்தளித்தார்
பொற்புமேனியழிவதுகண்டிதுவினைப்பொருளெனப்பயந்துசுவாகா
வொப்பிலாப்பதிபோதராகினதுடலினைத்திடுமவகையுரைப்பாய். (௫)

என்றுகூறுதன்மனைவியைமடிவுறுமயிலச்சைசயினான்முகநோக்கிக்
குன்றும்வாசகத்தானுரைப்பானறவக்குறையறுமெழுமுனிவரர்செய்
நன்றுவேள்வியினவர்துணைவியரெழிலைநதனைநோக்கினன்மனது
சென்றுகாதலிகதேனதுகண்டெனைத்தீங்சமுனிவரர்சபித்தார். (௬)

அந்தவேதவிநூற்றிறனுடையுடலழிக்கிடுநடத்தையெய்திடைவென்
றிந்துநேர்முகப்பாரியோடொரக்குமுனிறையிவினடந்துகவாகா
ரந்தவர்க்கிதுதகுதியன்றெனமனநனிமெலிந்தெழுமுனிவோர்பால்
வந்துதாளிணைவணங்கிமுன்றுணையமலர்க்கரம்பிடித்தினின்றிரந்தான்.

காநதனும்பலிமெனக்கருள்முனிவரேகனன்றநீர்சபித்திடவுடலந்
மிதய்ந்தவென்றணைபுய்யநீர்*சமையடன்றெளிநதிடுங்சடைக்கணுனக்
[கித்
தாழ்ந்தவிய்மொழுதவிர்த்திடுமெனவுரைத்தவடனைத்தயவுடனேனுக்கி
யாய்ந்தவேழ்முனிவரில்வதிட்டமுனிவனஞ்சலென்றிதவுடனுரைப்பான்

கமலமென்மலர்ககண்ணிணைசிறந்துமங்களவுருப்பொலிசுவாகாவே
நமதுகற்புடைப்பன்னியர்க்கிடர்செயநண்ணினனேனுநின்பதியைச்
சமைநின்மங்கலத்தாற்புரந்தருளிவரோய்தணந்திடும்வகைதனைக்கேண்
[மோ
வமையுந்தக்கணதேயததிலகத்திரளகற்றியெவ்வுலகையும்புனிதம். (௯)

செய்யும்பொன்னியென்றொருநதியினங்குமத்திருக்கரைக்குத்தரதிசை
[யிற்
றுய்யமூவுலகிலுமிசைபெறநறைசொரிநதகடவிளவனத்துடனே
தையனமேனியன்மகிழவுறுமொருசிவதலமுளததலநதன்னின்
மையிலன்பினர்களைகளைந்தியாவையும்வளக்கவல்லவண்மகிழிறையாய்

௵ வேறு

பிறையணிசதொளிர்சடிலாளைந்தமைபிறழும்வில்வவனேசரங்
குறையவராமுனமதிக*பாவனமோங்கிநோக்கினர்தோய்ந்தவர்
மறமகன்றிடமுத்தியுற்றிடமகிமைபெற்றுவளந்தரு
மறலிநுண்டமெனக்கதிக்குமோர்வாவியுண்டதினமூழ்கியே. (கக)

முந்தமானிடர்பாவநெறியின்முயன்றுழன்றவராயினு
மந்தமின்*னிருவாணம்வில்வவனத்தருளினரன்பினிற
சந்தவல்லவனெத்தலத்தினுமுத்தமம்பெறுமத்தலந்
திந்தவேலைநடந்துவில்வவனேசர்தாளிணையேத்தியே. (கஉ)

நன்மைசேர்துதிகூறியேசிலநாடவங்களியற்றினன்
மின்மருங்குமைபாகர்வில்வவனேசர்திருவருள்பெருகிடும்
பொன்மயங்கியவொளியும்வலியும்பொருந்திமுன்வடிவெய்துவன்
கொன்மதுத்ததிசகமடைந்துளங்கூருவாணடிகோதையே. (கங)

* கை ம - பொறுமை *பாவனம் - சுட்டமை *நிருவாணம் மோக்ஷம்

இக்கணத்தினின்னிறையிடத்தினினெய்தியிவ்வகை துவல்லையென்
றக்கினிக்கிணையாம்வதிட்டர வட்குரைப்பவனேரமே
மைக்கண்மங்கையும்வல்லவன் புடைவந்தியாவும் வழுத்தினா
ருக்குமனதுமவண் மொழிந்திடு முண்மையான் மகிழ்வாகியே. (கச)

பலமலர்த்திரள்பொலிவனத்திரள்பலவிசித்திரசித்திரம்
பலகனித்திரள்பல*ககத்திரள்பகர்தொனித்திரள்சொன்னமா
மிலகுபித்திகைநவமணிப்பணியிழைகொடிப்பொலிகோபுர
நலமிகுத்திடுசிகரமண்டபநாலுதிக்கினுமேவியே. ... (கரு)

மிக்கபுகழ்பெறுவில்வவனத்தினின்மெல்லமெல்லநடந்துசென்
றக்கண்வாத்தியவொலிமுழங்கியவாலயத்தினடைந்துபின்
முக்கண்வில்வவனேசர்சன்னிதிமுன்னடிக்கடிதெண்டனிட்
டெட்கணிந்துவளர்க்கவல்லவுமைக்குமன்பொடிறைஞ்சியே. ... (கசு)

சோதிவில்வவனேசருறையுளதுக்கவன்றிசைதன்னிலே
பூதலத்தருமுயவவனபெயர்பொலியநின்மலகூபமொன்
றுதரத்தொடுகண்டெழுந்தியதன்றடத்தினிலின்பமுற்
றுதனத்திலிருந்துதாரகனுதிதேவனனுமயன் .. ... (கஎ)

நாதனன்பர்நினைத்ததருளபவனனிமறைத்தலைதுதிசெய்வோன்
பாதிமதியணிபரமன்முச்சுடர்பயிலும்விழியினனெழிலுடைப்
பூதியன் சிவனிலமிடறுபொருநதுகிரிசூலக்கர
னுதவன்சதிர்கோடியொளியினனுரும்வில்வவனத்தனா. ... (கஅ)

எண்ணியுன்னிநலிதையபங்கயத்திருத்திக்கருத்தினைப்பொருத்திமுக்
கண்ணனின்புறுதவமியற்றியகாலையிற்சிலநாள்கழிந்
தண்ணல் வில்வவனேசரவன தருந்தவத்தினுகந்ததன்
வண்ணமவனிருகண்ணுறும்படிவந்துமுன்னர்வயங்கினர். ... (ககூ)

அன்புசெப்பவாரேயராயெல்லாம்வளர்ப்பவள்பாகராய்த்
துன்பிலாவன*றுகினன்ஞாயிறுதலங்குகண்ணினராய்வயல்
இன்பவில்வவனேசர்வரவுகண்டெட்டுறுப்பொடடிக்கடி
முன்புநின்றுபணிந்துவகையிரெழுந்கியிருகரமுடிமிசை. ... (உ0)

வைத்துமகிழ்வுமிகுந்துவாய்தடுமாறவினையவிதேயமா
யத்தனேமகதேவனேயருளாழியேயரசம்புவே
யத்தமதிநதிமுடியனேகனலாதவன்மதிவிழியனே
பத்தர்களைதவிர்குலியேபணிபணியெனுஞ்செகதீசனே. ... (உக)

*ககம் - பக்ஷி *துகினன் - சந்திரன்

சங்கராவந்தகனைவென்றசதாசிவாகுணவதிகனே
யெங்குநிறையணுவேமற்றச்சிரமேத்துசின்மயவுருவனே
மங்கைமலைமகள்கொங்கைதனிலணிகுங்குமப்பொடிமார்பனே
பொங்குமுனிவரரிதயகமலம்புகுந்துவதிதருபோதனே. (௨௨)

நின்றுனைச்சரணஞ்சரணமெனநினையுமெனையருள்கொண்டுகா
வென்றுதுதிபகவிண்டவன்கணிரங்கிவில்வவனத்தரன்
றென்றுமேனிதிறந்திருதியொளிர்சோதியும்பெறநல்கியே
நன்றுவரமுறுமங்கியேநின்னுமமியையகூபத்திலே. (௨௩)

தோய்ந்துநின்றுதிரம்முனன்பொடுசொன்னபேர்விடைகுவா
ராய்ந்தபலகலையங்கியேயிதிலையமில்லையென்றையரும்
வாய்ந்தவுருவமறைந்திலங்குதன்மந்திரத்தினமர்ந்தபின்
றேய்ந்ததேயுவுஞ்சிவனருட்கொடுதேர்ந்தவன்புரமெய்தினன். (௨௪)

சூதபுராணிகர், மும்மலமுமொருங்குசலைந்தவருந்தவர்க்குச் சிவநிசிமகிமையுரைத்து, அக்கினிதீர்த்தவரவையுரைக்கின்றனர். முன்னம், திரேதாயுகத்தில் சப்தவிருடிகளுங்கோமதிநதிக்கரையில், யாகஞ்செய்கையில், அவ்வியாகத்தினது நடுவில் வளரும், அக்கினிபகவான், அம்முனிவர் பத்தினிகளழகைக்கண்டு மோகித்து காமாக்கினியில்வெந்து சுவாலை யொடுங்கி நிற்பதை, அம்முனிவர்கள் ஞானநோக்காலறிந்து சினந்து கனலியைநோக்கி நீ, இன்றுமுதல் தேய்ந்துவிடக்கடவையெனச்சபித்துத்தமது தவாக்கினியைக்கொண்டு யாகத்தை நிறைவேற்றினர். பின்பு, காதலனிளைப்பதைச் சுவாகாவென்பவள்கண்டு, உமக்கென்னுற்றதென்று வினவவே, மனைவியிடத்தில் நடந்ததை நாணங்கொண்டுகூற, தேவிவருந்தி உடனே முனிவரிடஞ்சென்று, தானையைக் கரத்தேந்தி தாலிப்பிச்சைதந்தருளவேண்டுமென்ற, மங்கைக்குமனமிரங்கிய முனிவர்களில், வசிட்டமுனிவர் ஹேற, சுவாகா நினதுவல்லவன், தக்கணதேயத்தி லிவ்வுலகத்தைச்சுகிபடுத்திக் கதியளிக்குங்காவிரிவடபாங்கரில், மூவுலகுதொழும் பூபுரப்பிரானை அங்கு மறலிகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து பூசித்து அவனது நாமங்களைச்சொல்லித்துதித்தால் முன்னுருவடைந்து நின்னுடைவல்லவன் வல்லவனாவனென, அக்கணம், வந்துபதியிடஞ்சொல்ல, அவனும் பையப்பையச்சென்று இசைபெறுமிமகுண்டம்படிந்து வில்வவனேசமூர்த்தியையுஞ்சர்வரட்சகியம்மனையும் பூசித்துத்துதிசெய்து பிறகு, தனதுதிசையில், தனது தீர்த்தமொன்றுகண்டு அத்தீர்த்தத்தாலும் பூசித்துத்தோத்திரஞ்செய்துகொண்டு சில

நாள் வசித்திருக்குங்காலத்து, வில்வவனப்பெருமான் கருணைகூர்ந்து அவன்கண்மூன்றென்றவே, அவ்வக்கினிமகிழ்ந்து மொழிதடுமாறப்பல்கால் தண்டனிட்டுத்துதித்து, நின்னிணையடிசரணம். அடியேனைக்காத்தருளுமென்றுரைத்த தேயக்குத்தேகத்திற்றேய்வைத்தீர்த்து, சோதியுருவமிகக்கொடுத்துத்தனஞ்சயனே நினது கூபக்தோய்ந்து நம்மைத்துதிப்பவர் அழியாவீடடைவதற்கையமில்லை யென்றறைந்தருளிமறைந்தருளினர். அச்சிவபெருமான்றிருவருளைக் கைக்கொண்ட கனலியுந்தனதுபுரஞ்சார்ந்தனன்.

அக்கினித்தீர்த்தவரவுச்சருக்கம் முற்றிற்று.

ஆ சருக்கம அ-க்கு திருவிருத்தம உஉக.

உ

சிவமயம்.

ஒன்பதாவது.

பிரமபுரம் பிரமேசரென்னும் பெயர்வரவுச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம.

கன்றுமழல்வன்னியதுகூபவரவுரைத்தனமேற்கனமாம்பாவங்
குன்றுகதைபிரமபுரம்பிரமேசரெனவியைந்தகொள்கைகேண்மின்
வென்றிமழுப்படையணிந்தவில்வவனத்தரனருளால்வீடுஞ்சேர்வா
ரென்றுரைமிசஞ்சிறந்தவிய மியர்க்குச்சூதமுனியியம்புமாதோ. (௧)

விச்சுவமுண்டானவகையாதிதனினிறகுணநீங்கியவிகார
நிச்சயநிராமயநிராதரமெலாங்கடந்தநிமலமாகி
மெய்ச்சொருபமில்லாதுதோன்றுபிரமத்திலுயர்வெளியிற்பூத்த
வுச்சிதப்டங்கயமபோலவொருபொழுதுமாயையடைந்துறையுங்காலே.

திரிநயனங்கறைமிடறுதிங்களணிசசிதருவஞ்சிறந்தசூலம்
பரையிலைகள்விளங்கவொருவடிவமமைந்தீசனெனப்பகரவோங்கு
மருவியவவ்வுருவினுருத்திரன்றேன்றுமுருத்திரனின்மாயன்றேன்றும்
வருவரியினயன்றேன்றுஞ்சரமசரமவனருளவழங்குமாதோ. (௩)

அவரிலயன்படைப்பவரியளிப்பவுருத்திரனழிப்பவவர்கட்கெல்லாஞ்
சிவமெனுமீச்சுரனேதுகாரணராய்விளங்குவரத்திரிமூர்த்திக்கு
ளுவமையிலாதுத்தமனுமுருத்திரனவரிற்றிரமாயுரைக்குங்கோவா
மவகையினுலுருத்திரனேபரத்தினுக்கும்பரனெனவேயறிந்துவேதம் (௪)

அவனையவனதுபெயரையணிகலனையுருவைமுனையசியையவாழ்த்தி
நவநவமாய்ப்புகழ்ந்துநிதம்பணியுமெனதவேதுவினுனுன்முகன்மா
லுவமையிலாவுருத்திரனையடுத்தனரோவவனேயிவ்வுலகுக்கீச
னவனிவிளங்கியநடத்தையிதுவன்றேவதையறிந்துமறியாராகி. (௫)

ஒருகாலையகத்தொடரியயன்சேர்ந்திராசதத்தானென்றுகொன்று
பருவைரமாய்முனிவார்கலகம்விளைத்தரியானேபதியாமென்கப்
பிரமனிருகண்சிவந்துசமொழியானின்தன்பர்பேயோடாடிக்
குரியரன்றியக்குமணிபூதியொழிந்திருபுயத்திறுளிசங்காழி. (௬)

*அங்கிதராய்மந்திரதந்திரமகன்றுபுலியிடத்தினமைவரென்னச்
செங்கமலைநாயகனைச்சபிக்குமுனந்திருவரியுஞ்சினத்திறலைப்
பங்கயனைப்புலியிலுனையாருமருச்சிக்கமனம்பற்றிலாமற்
சங்கையுடனிருப்பரெனச்சபித்துமுனிவரலவனைத்தகர்க்கவாழி. (௭)

கரத்திலெடுக்கவும்பிரமன்பிரமதண்டைத்திரத்தாற்கண்ணன்மீதி
னுரத்தடிக்கநினைத்தனனப்பொழுதுநிலமலையசையவுததியேழு
முரைத்துமறுகிககலங்கவும்பர்பயந்துழன்றுமனநோகக்கண்டு
மருத்துமுனிவரரமரருடனவர்போர்விலக்குதற்குவல்லாராகி. (௮)

சென்றுசதாசிவனையெலாந்தெரிந்தவனைச்சரமசரத்திருக்குங்கோவை
யென்றுமறுமயனையுயர்சங்கரனைமூவுலகுமிறைஞ்சுநதேவைக்
கொன்றையணியீச்சரனைச்சரணமெனவடைந்துதுதிகூறுங்காலை
குன்றுவிலியடியர்நண்பன்பகவன்மெய்யான்மாவாகக்கூறுஞ்சம்பு (௯)

தேயுவிலிங்கத்துருவாய்மாலையெனக்கனல்சூழன்றுசெறியான்மாவாய்
மாயன்முதலமரர்முனம்வந்தனன்சதாசிவனவ்வடிவைநோக்கித்
தூயகலைமசடுனைவன்மாலாதிதேவர்பயந்துவன்றியோட
வாயுவிலிங்கத்துருச்சதாசிவனுமவரையழைத்தருளுவாரே. (௧௦)

அஞ்சலஞ்சனீவிர்வரமளிப்பவுமக்கிங்குவைங்கோமயன்மாலாதி
மஞ்சினுறைதேவருக்குளியானேயுத்தமனதனால்வழுத்தக்கேளுமின்
மிஞ்சியநம்முடியடியைநோக்குதற்குச்சென்மினதின்மெலிந்துமீண்
[டோர்
தஞ்சரெனவேனமனமெனவுருக்கொண்டரியயன்பாதலம்விண்சென்று
ர். (௧௧)

பூதலத்தைமுனைமருப்பாற்குடைந்துபாதலங்காறும்போந்துமாய
னாதிதொடைமுடிவுமறியாதுமிகவார்த்தியிலுலசந்துமீண்டு
வேதனையேவெறுத்துமனவேதனையால்வந்தனன்பின்விண்ணிற்சென்ற
வோதிமத்தினுருவயனுஞ்சிவனதுமாமுடிசாறுதுழலுங்காலை. (௧௨)
ஆங்கொருகண்டகமலரைக்கண்டயனெவ்விடத்துறைந்திங்கடைந்தாயி
[ப்பா
லீங்கெவிடத்தேகுதியென்றுரைப்பமடியோதிமமாயிறையைநோக்கி
யோங்குசிவன்முடிவிடுத்துநூறுயுகஞ்சென்றுமினமுலகைக்காணே
னீங்கெவிடஞ்செல்குதிநீயென்றுகைதையுரைப்பவயனேங்கிச்சொல்வா
[ன். (௧௩)

எப்படியகோசரமாஞ்சிவன்முடியைக்காண்பதெனவெண்ணித்தாழை
நட்புறவோர்வகைபுகல்வனேழடியோரிடநடந்தோர்நண்பரென்றே
செப்புவராதலினுனக்குச்சேடனெனவெம்மிடத்திற்சிந்தைகூர்ந்தே
யொப்புமுபகாரமொன்றுசெய்குதியென்றுரைப்பனன்னவுருவவேதன்

* அங்கிதம்—உடற்றழும்பு.

அண்டர்பிரானிடத்தடைந்துநின்முடிகண்டேனெனயானறைவேனியுங்
கண்டனன்கண்டனனெனவேகரியுரைக்கவேண்டுமென்மேற்கருணையா [லென்
றுண்டியந்தக்கேதகையோடுறவாகித்திரும்பிமகியுறைந்தானில
கண்டரிடங்கண்டிலன்றுளென்றன்மால்வேதன்முடிகண்டேனென்று [ன். (கரு)

அப்பொழுதினறிவிலாக்கேதகையுமாமாமென்றறையக்கேட்டு
வெப்பமொடுசங்கரனவ்வேதனையுங்கைதையையும்வெகுண்டுநோக்கி
யொப்பகனம்பத்தரினியுத்தமனென்றிருந்துமிப்பொய்யுரைத்ததாலி
னிப்படைக்குந்தொழில்வாணிநேயனென்பதிவ்விரண்டுநீங்குமின்றே.

என்றுசொலியேழைமதிக்கேதகையேவேதியனுக்கிதமாய்நம்மு
னின்றுமுடிகண்டனனென்றவமாகக்கரிபுகலநீதியாலே
யென்றுநமக்காகாமலேகுதியென்றேசாபமியம்பியாங்கு
மன்றமொடுமறைந்தனனவ்வேலையயந்திமையோரும்வாசஞ்சேர்ந்தா
ர். (கஎ)

பிரமனுஞ்சாம்பியமுகமாய்ச்சலிக்குமனுவாய்மிகுந்தபீதனுகிப்
பரியதுன்பத்தினொடுவெட்கிமிகவுக்கியவன்பதியிற்சேர்ந்து
கரகமுலைமனைவியுடன்புகல்வனென்றன்கண்ணேநற்கலைமின்னேகே
ளரன்சிரம்பாதங்காணயானன்னமாயரியுமரியுருவமாகி. (கஅ)

*பாதலங்கீண்டொருகணத்துக்காயிரங்காதம்படர்ந்துபலமுந்தேய்ந்தே
யேதினிநம்மாலடியைக்காண்பதற்குமுடியாதென்றிவர்ந்துமெய்மை
யோதினனேறிமவுருவத்தியானுமரைக்கணத்தினுக்கோராயிரஞ்சேர்
காதமதுகடந்திறையுமுதிர்ந்துமுடியறியாமற்கலங்குங்காலை. (கசு)

*முண்டகமொன்றம்மலையின்முடியிருந்துவிழவதனின்முன்புசென்று
மண்டலஞ்சேர்கைதாய்நின்றனக்குநண்பனென்றென்னைமதித்திவ்வெர [ள்வே
தண்டமுடியயன்கண்டானென்றரன்முன்பொருகரிநீசாற்றென்றேனக்
கண்டல்சரியெனவந்தவழிநோக்கிவந்தரனைக்கண்ணுற்றியானும். (உ0)

* இம்மலையின்முடிகண்டேனென்றனன்கைதையுமாமென்றிசைப்பக்கே [ட்டுப்
பொம்மன்மலருறுமெனையுமம்மலரினையும்வெகுண்டுபொய்மைசொன் [னீர்
கொம்மைமுலைவாணியன்பன்படைப்புவினையிரண்டையுநீங்குகவெனக [தாய்
நம்முன்வரலொழிநீயென்றுரைத்தனன்விண்ணவருஞ்சிகரம்சேர்ந்தா [ர். (உக)

*பிரமையொடுமுகம்வாடியுருவொடுங்கியரையுடம்பாய்ப்பெருகுதன்
[பப்
பரவையதின்முழுகியிதற்கென்செய்வேனென்றுநந்தம்பதியிற்சேர்ந்
[தேன்
வரிவிழியாயிதற்கினியாஞ்செய்வதென்மாட்டினைப்புரக்கும்பாலர்கூட
[ப்
பிரமனென்றெனைக்கணியார்வானவராவெனைக்கணித்துப்பெருமைசொ
ல்வார். (௨௨)

எனவழுங்குந்தன்பதியைத்தேற்றிவாக்காள்கைலைக்கேகியாங்கு
கனகமயமானசிந்தாமணியவைமண்டபத்துயர்சிங்காதனத்தி
னிணையுமன்பரைப்புரக்குஞ்சங்கரனைப்பரையுடனேநீங்காதோங்கு
மனமரியவொருபொருளைக்கண்டொடுங்கிவணங்கிமலரடியின் வீழ்ந்தே

அதிமதுரவாசகத்தானன்பினொடுசெல்கருமமறியச்சொல்வாண்
மதியினினைத்ததையறிவோயையவகிலேச்சுரசமத்தபூதத்
திதவவன்பர்நண்பமின்பார்ப்பதிரமணநாதவுணர்வில்லாதென்றன்
பதிசெய்பிழைபொறுத்தருள்வாயன்புடையேன்மீதிலருட்பார்வைநோ
[க்கி. (௨[illegible])

படைத்தலென்றன்பதியாதல்பரிந்தருண்முன்போலினும்பரியாயே
[ல்வே
றிடத்தெவர்பாலிப்பவர்நின்பதவிணையேகதியெமக்கென்றிறைஞ்சுங்கா
[லைப்
படத்தரவமணிபகவன்பத்தர்கள்சொற்படிநடப்போன்பதிமீதாசை
பிடித்துரைக்குங்கலைமகளைநோக்கியிளநகையொடான்பேசுமாதோ.

மங்கலமென்வடிவேகேணம்வசனம்பொய்க்கதிகமறமொன்றில்லை
யங்கதனின்கணவனின்புறவேறொருவயனமறையக்கேண்மோ
பொங்குலகம்புனிதமுறச்சகலமறமறத்தென்யார்பொலிந்துமிக்க
துங்கமிகுகாவிரியென்றோர்நதியுண்டத்திர்த்தத்*துதக்குப்பாலின் (௨௬)

நமக்கதிகபிரியமிகுவில்வவனமென்றொருநன்னகருண்டாங்கியா
மூமைக்கனியோடுறைகுவமெப்போழ்துமதியுகந்தவிடத்துறைந்துநின்
[கோ
னைமைத்துதித்தன்பொடுபூசையியற்றினனேற்படைத்தனினக்கிறைவ
[னுத
லிமைப்பொழுதினளிப்பமெனவிறைவர்சொலவாணியுந்தனிறைபாற்செ
ன்றே. (௨௭)

---

* உதக்கு—வடதிசை.

ஸ்ரீதபதியுரைத்ததெல்லாம்புகன்றனன்வேதியனுமனம்பொலிந்தப்போழ் [தே
தீதகற்றிநன்மைதரும்வில்வவனஞ்சென்றியமன்றீர்த்தத்தாடிக்
கோதகன்றமனத்தினொடுமெய்முழுதும்பொடிதரித்தக்குமணிபூண்டு
வேதவிதியாய்த்திரிபுண்டரந்தரித்துப்பொற்சிகரம்விளக்கினன்றாய் (உஅ)

ஷை வேறு.

பத்தியாயியமன்கண்டபடுகரினீரெடுத்தே
யுத்தமமானவேதவுருத்திரஞ்சூத்திரத்தா
னித்தனைவளர்க்கவல்லநிமலையைமகிழ்நீராட்டிச்
சித்திரமாகவம்பொன்செறிந்தபட்டாடைசாத்தி. (உகூ)

கதிர்மணிப்பூடணங்கள்கலந்தகர்ப்பூரச்சாந்தஞ்
சுதைமதிநன்மைவெள்ளச்சுதநவமணிப்பூப்பொற்புத்
துதிபெறுந்தூபதீபஞ்சுவைநைவேத்தியம்பலன்கண்
மெதுவுறுநறுந்தாம்பூலம்வெண்குடைசாமரங்கள். (௩0)

மயிலிறைவிசிறிமேளவாத்தியநிருத்தங்கீதஞ்
செயல்பெறுவந்தனந்தோத்திரமுடல்வலத்தினொடு
மயலறுசிவனும்வில்வவனத்துறைப்பூசைசெய்தே
நயமொடுவணங்கிக்கண்ணானந்தவாரியையுகுப்ப. (௩௧)

மெய்ம்மயிர்பொடிப்பச்சென்னிமீதிருகரங்குவித்து
மைமிகுகண்டன்றன்னைவளர்சிவசங்கராவேர்
மொய்மலைமகடன்கோனேமூவுலகிறைஞ்சுபாதா
கைமதிமுடியாய்சன்மக்கடல்கடந்திடுவோய்நாதா. (௩௨)

அர*மிருடாவநாசவம்பரகேசசம்போ
பரமவானந்தனேயபாயமில்லோய்மகேச
வரநதித்தாங்கம்வீசுவதினைசடையாய்திங்க
ளரியெரிக்கண்ணாகாமவரவரிகேசதேவா... ... ... (௩௩)

பணிசரணுமுருந்தன்பன்றியாய்த்தேடுபோதா
குணவடிவாபுராரிகுணவதிகாபரேச
கணிகருணாகராவோங்காரத்தாமரைக்குச்*சூரா
வணிசகநாதாபத்தரார்த்தியைவிலக்குமையா. ... ... (௩௪)

---

* மிருடன்—சிவன்.

* சூரன்—சூரியன்.

சருவகிரிசசூலதரக்கரதமிழ்ப்பாமூவர்
பரவியவதிபாதிக்கம்பரகுகாலயகணேச
குருவடிவாகிர்வாணங்கொடுப்பயாவேதசாரா
குருவரைமகளாங்கிள்ளைக்குடம்பையாம்வாமபாசா. ... (௩௫)

தாரகையாவின்பால்வெண்டரளந்தண்பனிசுவைக்கு
நேருறுமெய்யாவன்பர்நேயபூதேசவாதி
யாரணமுடிவணங்குமனகவிச்சுவத்துக்கீசா
பாரிரதம்மால்வாளிபனிமதியுருளைவேதன். ... ... (௩௬)

திறலுடைவலவன்சேடன்*சிஞ்சினிமேருவில்லாப்
பெறுமகதேவாமேதைபேதகமாய்மயங்கி
யறிவிலாப்பிழைசெய்யுநின்னடியன்மேலன்புவைத்துப்
பொறுமையாவென்றுபோற்றிப்புகழவில்வவனநாதர். ... (௩௭)

பிரியமாயயன்முன்னின்றுபெரிதுவந்தருட்கணோக்கிக்
கருதியதளித்தும் பின்னுங்கலைமகட்கிறைவனென்றல்
சரமசரம்படைத்தறனைக்கொடுத்தனுப்பியப்பான்
மருவியவிலிங்கத்துள்ளேமறைந்தனரிறையவ்வேலை. ... (௩௮)

மாலருண்மகனுகந்துமலர்ந்தநான்முகத்தினாலவ்
வாலயந்தன்னைநோக்கியங்கங்குசிதைந்திடிந்து
சிலமாமதில்களெல்லாஞ்செடிகொடிதருப்பொலிந்து
போலியாய்க்காடுகொண்டுபொருந்துதல்பொருந்தானாகி. ... (௩௯)

அத்தமெல்லாங்களைந்தவ்வரனுறை மந்திரத்தை
யத்தமொப்பாக்கிமுன்போலாலயமியற்றவேச
மத்தனும்விச்சுவக்கன்மாவையங்கருகழைத்துப்
பித்திமண்டபஞ்சோபானம்பிறங்கியகதவந்தம்பம். ... (௪0)

சிகரகோபுரநன்மேடைதென்றல்*வாதாயனம்முச்
சகமகிழ்தோரணம்பதாகைகுட்டிமமனைத்து
நகைநவமணிகள்சாம்பூநதத்தினானவமாய்ச்செய்து
வகைவகையாகநானவன்னமும்பொருந்திவாழ்க. ... (௪௧)

தானியந்தனங்கள்பொங்கித்தழைக்குமந்திரங்கள்கட்டி
வானகர்க்கிணையாமென்னவளமுறுநகரஞ்செய்து
பானிருமலனும்வில்வபழுவநாதரைப்பணிந்து
தானுறையுலகந்தன்னிற்சதுர்முகன்மகிழ்ந்துசென்றான். ... (௪௨)

---

* சிஞ்சினி—நாணி.

* வாதாயனம்—பலகணி.

பிரமனுல்வகுத்தர்ச்சித்தபெருமையாலந்நகர்க்குப்
பிரமபுரமென்றுநாமம்பெறும்பிரமேசரென்றவ்
வரனதுநாமமாகுமயன்றுதிசிவன்முன்சொன்னேர்
கருதுகாமியங்களெய்திக்*கைவலமடைவர்மாதோ. ... (௬௩)

* கைவலம்—முத்தி.

நேமிவனத்துறுமருந்தவர்க்கு, அக்கினிதீர்த்தவரவுரைத்துப் பிரமபுரம் பிரமேசரென்ற பெயர்வரவைச் சூதபுராணி கருரைக்கின்றனர் ஆதியந்தமின்றிச் சர்வ சாட்சாத்கார அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாம் பிரமத்தினிடத்து, மாயையின் சாயை பட்டுச் சிவந்தோன்றி அச்சிவத்திலுருத்திரன்றேன்றி, அவ்வுருத்திரனில் மாயன்றேன்றி அம்மாயனிலயன்றேன்றி அவ்வயனில் சராசரப்பொருளனைத்துந்தோன்றும், அச்சராசரப்பொருளனைத்தையும், அயன்படைப்ப ஆயன்றந்தைகாப்ப, அவன்றந்தையழிப்ப அச்சிவன் றந்தையிவற்றிற்குக்காரணமாக விளங்கும், இங்ஙனம், முத்தொழில்வல்லவுருத்திரனேமுழுமுதற்கடவுளென வேதந்துதிசெய்கின்றன, இவைசளையறிந்துமறியாராயகங்கொண்டபிரமன்மாலிருவரும், யான்பெரியன், யான் பெரியனென்று ஒருவரையொருவர் சபித்துக்கோபித்து, ஒருவர் சக்கரஞ்சுழற்ற, ஒருவர் தண்டந்தூக்கவே, நிலமசைந்துமலைகுலுங்கிக்கடல்ததும்பக் கண்டதேவர்கள் பயந்து இப்போரைவிலக்கவல்லவன் சிவபெருமானே யென்றேடிப்பணிந்து வேண்டச் சிவபெருமான், தேயுவிலிங்கமாய்ப் பூமியாகாயந்தெரியாமல் நிற்பக்கண்டு பயந்தோடியமாயனயனை, அஞ்சேல். உமக்கு வரமளிக்க இங்குவந்த யாமேபதி, எமதடிமுடியறியச் சென்மின், அறியாதுமெலிந்துவந்தவரே யெளியரென்றுமையவள் தலைவன்செப்பக்கேட்ட விருவரில், மாயன் பன்றியாய்க்கணத்துக்காயிரங்காதம் பூமியைத் தொளைத்துத் தனதுவாளை வீணுக்கி, அடியைக்காணுது மெலிந்து மீண்டு அடியை யறிகிலனென்றனன், பிரமன் அன்னமாயரைக்கணத்துக்காயிரங்காதம் பறந்து சிரகுதிர்ந்து முடியறிய முடியாதென்று வருந்து மவனெதிரே தரையைநோக்கிவிழும் ஓர் தாழமலரைக்கண்டு அதனேடு நட்புபாராட்டி நினது தோழனுகியயான் யாது பகாரம் புரிகுவன்ஆயினும் என்னிடத்தன்புகொண்டு பூமியிற்சென்று, சங்கரனிடத்து இவ்விலிங்கத்து முடியைக்கண்டனனென்பேன் நீயுங்கண்டானென்றுரைக்க வேண்டுமெனவே அம்மலர் சம்மதித்து இருவரும் வந்து சிவபிரானிடஞ்செப்பலும் வெகுண்டு உத்தமனுகிய நீ இப்பொய்யுரைத்தநால், படைப்புவினையும் பாரதி நேயனென்பதும் நீங்குவையென்று, சபித்து, கைதாய் இனி நம

து முன் வாரலொழியென்று மறைந்தருளினன், இமையவருந்தமது புரஞ்சென்றனர். பிரமன்றன்புற்று மனைவியிடம் நடந்ததைக்கூறிய நாயகனைத் தேற்றுவித்துக் கைலையிற்சென்று பார்ப்பதிமணாளனைப்பணிந்து துதித்து, எனது கணவன் தெரியாதிழைத்த தீங்கைப்பொறுத்து முன்னம் போலாகவருள்செய்யென்னுங் கலைமகளை, அருட்கடல் நோக்கித் தென்பாரிற் பொலியுங் காவிரி நதி வடபாங்குள்ள, நமக்குப்பிரியமான வில்வவன மென்னுந்தலத்திற்கு, நின்னாயகன்சென்று அங்கெழுந்தருளிய நம்மைப்பூசிக்கின், இரண்டு முண்டாகுமெனக்கேட்டு நாயகனுக்குச்சொல்ல, அந்நான்முகனங்குசென்று யமதீர்த்தமாடி வெண்பொடியக்கமணிபூண்டு, அத்தீர்த்தத்தினால் சிவபெருமானை அபிடேக அலங்கார வுபசார முதலிய செய்து துதி புகன்று, விச்சுவக்கன்மாவையழைத்து அவ்வாலயத்தைக்கனகங்கொண்டு புதுக்கி அநேகமண்டபமுதலியவைகள் செய்வித்துத்தனது பெயரால் தீர்த்தமொன்றுகண்டு வில்வவனேசன்றிருவருள் கைக்கொண்டு படைப்புத்தொழிலையும் பாரதிநேயனென்பதையும் பெற்றுத் தனது புரஞ்சார்ந்தனன், ஆதலாற் பிரமபுரம் பிரமேசரெனப் பெயர்வந்த விச்சருக்கத்தைவாசிப்பவர் கேட்பவர்கைவலம் பெறுவரென முனிவர்கட்குச் சூதபுராணிகர்புகன்றனர்.

பிரமபுரம் பிரமேசரென்னும் பெயர்வரவுச்சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் கூ-ஐ திருவிருத்தம் உசுச.

௳

சிவமயம்.

பத்தாவது

அரியீசனென்னும் பெயர்வரவுச்சருக்கம்.

கலிநிலைத்துறை.

வேதனுமமப்பதிக்குமவ்வரனுக்கும்விளங்க
வோதினோமரியீசனென்பதுமினியுரைப்போங்
காதலாலிதுகேட்டவர்பலனையார்சணிப்பார்
போதவேதியரேயெனச்சூதரும்புகல்வார். ... ... (௧)

பண்டுவெள்ளியங்கிரிதனிலாதியாம்பரம
னண்டர்மாமணியாடகத்தாலிழையவைசேர்
மண்டபத்தரியாதனத்தெழின்மலைமகளோ
டெண்டிசைத்தலத்தோருகந்திறைஞ்சவந்திருந்தார் ... (௨)

அந்தவேலையிலரியயனமரருக்கிறையா
மிந்திரன்றிசைத்தலைவர்கந்தருவர் நல்லியக்கர்
புந்திவிஞ்சையர்பன்னகர்கருடர்கிம்புருடர்
நந்துகுய்யகர்சாரணர்சித்தர்கின்னரரும். ... ... (௩)

மிக்கதூய்த்தவரனைவருமன்பொடுமேவி
நக்கனைப்பணிந்தவனருளேவலினாலோர்
பக்கமேகியங்கங்கிருந்தனர் சுரர்பணியான்
மைக்கண்வானவர்மடந்தையர்தனிற்சிலமடவார். ... (௪)

செங்கொலிந்தனத்தழலமைத்ததிலகிற்சேர்த்துப்
பொங்குதூபங்கர்ப்பூரநற்றீபமும் பொருத்தித்
திங்கண்மாமுகத்தேவிக்குஞ்சிவனுக்குஞ் செலுத்தித்
தீங்குமன்புவினையமுடனவரடிதாழ்வார். ... ... (௫)

பூத்ததாரகைநேர்பொரிசிலர்கொடுபோற்ற
வாய்த்தபேர்சிலர்மந்திரமலர்கொடுசாத்த
வார்த்ததூரியமன்பொடுசிலருகந்தடிக்க
மூத்திலார்சிலர்*முளைவளைபலபலமுழக்க. ... ... (௬)

*முளை—வெண்மை.

சுத்தமாதவர்சிலராசிவவெனத்துதிக்க
நத்துநேர்களத்தரம்பையோடினஞ்சிலர்நடிக்க
வொத்தவித்தொனிகம்மியவிறுக்கத்தினுமைபா
கத்தர்நெற்றியிற்கனமெனச்சிறுவெயர்கலிப்ப. ... (௭)

சிந்தும்வேர்வினையரன்கனிட்டிறைகொடுதெறிப்ப
வந்தவேலையவ்வெயர்வொருதானவனாக
வெந்தழற்கணன்வேதனையழைத்துநம்வெயர்வில்
வந்தவவுணனுக்கொருபெயரியல்புறவகுத்தே. ... ... (௮)

இல்லறத்துறவதுவைசெய்தவன்பெயரியைய
நல்லமாநகர்செய்தொளிர்நவமணிக்கனகம்
புல்லுமாமுடிபொருத்தியிங்கேகெனப்புனிதன்
சொல்லுமேவலினான்மலர்வேதியன்றுரிதாய். ... ... (௯)

வேலைவாயடைந்தவனதுவிண்டொடுமுடியுஞ்
சாலநீர்மலிபாதலத்துருவியதாளுந்
தூலமேனியுநோக்கிமிக்கவும்வியந்துடனே
சீலநீர்கொடுமந்திரித்தவன்மிசைதெளித்தே. ... ... (௧௦)

அக்கணத்திலவ்வவுணனைச்சிசுவடிவாக்கி
யெக்கிமுக்கியுமெடுத்துத்தன்மடிமிசையிருத்தி
வைக்குநாடமிவனுக்கெனவென்றெணுவானை
மற்கடக்கரத்தாற்*புகுடியினிடைவகிர்ந்தான். ... ... (௧௧)

அந்தநோய்பொறுக்காதயன்வருந்தியுமழுநீர்
நந்துதானவன்மேற்சொரிந்தனலெனநனைப்ப
வுந்திவந்தவன்மடியையவிட்டவுணனுமொதுங்க
விந்தவேதுவிற்சலந்தரனெனப்பெயரிசைந்தே. ... ... (௧௨)

பக்கமாயழைத்தவன்பெயர்பெறவகல்பதியொன்
றக்கணத்தினிலமைத்துநன்முடிபுனைந்தியாரு
மெய்க்கவாழியக்கன்மகள்விருந்தையைவேட்டுத்
தக்கசெய்தியெலாமயன்சிவனுக்கெச்சரித்தான். ... ... (௧௩)

ஏமமாஞ்சிவன்வெயர்வினிலெழுந்ததினேயந்த
நாமமெய்தியசலந்தரனையர்மின்றுரை
சேமமாயொழிந்திமையவர்க்கிடர்செயநெடுநாள்
வீமமாயுழன்றனனவன்மடிவகைவிளைந்தே. ... ... (௧௪)

* புகுடி—புருவம்.

அண்டர்யாவருநாரதன்றனைநயந்தனுப்பக்
கண்டுதானவன்களிவுடனெழுந்துபசரித்தே
யண்டினம்பதிக்கடைசெயலுரையெனவவன்பால்
விண்டகாலையினாரதர்சிறுநகைவிளைத்தே. ... ... (௧௫)

நின்னிடத்தினிலோர்மறையுண்டதைநிகழ்த்த
வுன்னிவந்தனமியாதெனினுன்புகழ்க்கிணையாம்
பன்னிநன்கிலையவளையொப்பாருமெங்குமிலை
யென்னுங்காலையவ்வவுணனுமுனிதனையிரங்கி. ... ... (௧௬)

காந்திறற்குணமிளமையேருறுநலங்கற்பு
வாய்ந்தநம்மனையாடனையிகழ்ந்திடும்வகையை
யாய்ந்துசொன்மினென்றவுணனுஞ்சொலமுனியறைவான்
கார்ந்தமோன்மயலாய்ப்புகன்றனையொருகணிகை. ... ... (௧௭)

உருவயெளவனநற்குணமொழுக்கமுள்ளவளாய்
யருகுறும்வழியாய்ப்புகலுவநினக்ஈதுகே
ளிருமைவெண்மலைமேற்பலியேற்பவன்சிவனென்
றொருவனுண்டவன்மனையவள்குணமெழிலுருவம். ... ... (௧௮)

இளமைமுன்முற்றுமிசைந்தவளவளுனக்கிணையாம்
வளமையாதலினவளைநின்னிடம்வரவழையீ
துளவெனப்புகன்றம்முனியேகியவுடனே
களிர்கன்மங்கையைக்கொணர்வரத்தானவனடர்தான். ... (௧௯)

அக்கணத்தினின்விருந்தையாமவன்மனைதகைத்தே
பக்கமானதன்காதலனோடுரைபகர்வான்
மிக்கபோரினில்விருப்புறுநாரதர்விள்ளும்
பொய்க்குளாய்ப்பலியாமுயற்சியின்மனம்போக்கி. ... (௨௦)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஏகற்குத்தியன்றுலகமெல்லாம்வளர்க்குந்தந்தையரன்
பாகத்தமர்ந்தமலைமகளொப்பாருமளித்ததாயவண்மேன்
மோகித்தெழுந்திங்கெடுத்துவரமுயலுமுயற்சிமுடியாது
காகத்தினுக்கின்னமுதருந்தக்கனவுதனிலும்வாயாதே ... (௨௧)

என்றுதடுத்துமவன்மொழிக்குளிசையாதெழுந்துமதத்துடனே
சென்றுகைலையடையுமுனந்தேவரனைத்துந்தெரிந்தோடிக்
குன்றியொளிப்பச்சலந்தரனுங்குன்றுவிலியும்போர்விளைப்ப
வன்றுநாதன்வெற்றிபெறவணங்குவிருந்தைதவம்புரிந்தாள். (௨௨)

ஏலக்குழலிவிருந்தைகற்பினிகல்கொண்டவுணனெடுநாளாய்ச்
சூலக்கரத்தன்மூவுலகுந்துணிக்குந்திறத்தன்சமனொடுங்கக்
காலிட்டுதைமுக்கண்ணனொடுகதித்துப்போர்செய்வகையறிந்து
காலைக்கமலக்கண்ணன்மனங்கருதிவேடத்தெதியாகி. ... (௨௩)

தொண்டுபுரியுமாணுக்கர்சூழவிருந்தைமனைக்கடையக்
கண்டுவிருந்தையெழுந்துமனங்கனிந்துகமலப்பதத்திணையிற்
றெண்டம்புரிந்துவினையமொடுதேவரீரிங்கெழுந்தருளப்
பண்டுதவத்தின்பயன்யாதோவென்றுமுகமன்பரிந்துரைப்பாள். (௨௪)

பாரிற்றழைக்குமுயிர்களுய்யும்படிசஞ்சரிக்கும்பதத்துறவா
யாருந்துதிக்கமுற்றுமுணர்ந்தமர்ந்தோயென்றன்மனத்தினிடை
சேருங்கவலையொன்றுளததேதென்ருலித்திரியுலகும்
*வாரமிகுந்துபணிசிவன்மேல்வாதாவெழுந்துமதத்துடனே. (௨௫)

என்றன்பதிசென்றமர்விளைப்பானிறத்தல்பிழைத்தல்தோர்வைவெற்றி
யொன்றுந்தெரிந்ததிலையிதுநீருரைக்கவேண்டுமெனவிருந்தை
நின்றுமொழியவெதிவேடமெடுத்தவரிகண்ணிணைமுகிழ்த்தே
யொன்றியுயர்சமாதியினாலுணர்தல்போலநகைமுகமாய். (௨௬)

கற்பின்மிகுந்தவிருந்தைமனங்களிப்பவுரைப்பரஞ்சாதே
பொற்புமிகுந்தகாரிகைநின்புருடனுயிர்க்குச்சேதமில்லை
யொப்புமெனதுகற்போராலுன்றன்பதியிங்குறைந்திடச்செய்
விப்பமெனவவரைநோக்கிவிளங்குகைலைமலைக்கேகி (௨௭)

நமதுமொழிவிண்டவனையிந்தநகரிற்கொணர்தியெனவனுப்பி
யிமையினவனைநோக்கியங்கங்கேகுவேமென்றியம்பவவ
ளெமதுமனையிற்பலியருந்தியேகுவீரென்றுபசரிக்கக்
கமலைகேள்வனுமெதிநிற்கணவன்வரட்டுமென்றுரைத்தே. (௨௮)

தனதுமனையிற்சென்றுசலந்தரனைப்போலவுருவெடுத்து
வனசக்கண்ணனவண்மனையின்மறுத்துஞ்செல்கவவண்மகிழ்ந்து
நினைவிற்கணவனெனநாறுவெந்நீராற்றைலமுழுக்காட்டிக்
கனகத்துகின்மின்னவமணியின்கலங்கடரித்துமலங்கரித்தே. (௨௯)

நிலவுமுறுவல்விளைத்தகடுநிரம்பவாறுசுவையுடனே
யிலகுமமுதுமருத்திவைத்தேயிலைபாகருளித்தானுமுயர்
கலையும்பணியுந்தரித்தசனங்கனியோடருந்திநவமணியாம்
பலபொன்னிழைத்தமஞ்சமிசைப்பதியென்றுகந்துபடுத்தவனை. (௩0)

* வாரம்—அன்பு

கண்ணன்கலசமுலையருந்திக்கட்டியிறுக்கிக்கனியிதழை
யுண்ணுமமுதமெனவருந்தியுடையைவிடுத்தங்கூடாடிப்
பண்ணுந்தொழில்களனேகவிதம்பரிந்துபோகம்விளைத்தவுடன்
வண்ணாவிருந்தைகற்பகன்றவகையாலவுணன்வலிதொலைந்தே. (௫௧)

மெலியுமவனைச்சிவன்றனதுவிரலங்குலியாந்திகிரியினாற்
பலவுமுனிந்துமுடித்தலையைப்பறியவரியன்றேவுகற்போர்
மலையுஞ்செருவின்மடியுமவன்வார்நற்சிலையும்வலிமுடியுங்
குலவியெடுத்துவிருந்தைதுயர்கொண்டுகலங்கக்கொண்டுவைத்தார்(௫௨)

வைக்குங்காலத்தடிமுடியைமாதுநோக்கிமனஞ்சிலசும்
பிக்கவெழுந்துகபட்டில்வரும்பிரியவரியையுலகனைத்துந்
தக்கவருளாற்புரந்தளிக்குந்தயவைவிடுத்துக்ஷன்மனதா
யொக்குமெனதுநாயகன்போலுருவமெடுத்துவஞ்சனையாய். ... (௫௩)

ஓங்குங்கற்பையழித்ததிரு*வுபலமாகநின்மனைநீ
தாங்குஞ்சிலைநின்றலையிரண்டுந்தறிப்பக்கண்டேன்போலிரங்கி
யேங்கக்கூடவதெனச்சபித்தேயிறைவன்றலைவன்சிலையுடனே
வீங்குமுயிரைக்கனலினிடைவிடுக்கவரியுங்கற்புடையாள். ... (௫௪)

சாபத்தினினுட்கலங்கிமிகச்சலித்துவிமலவடிவகன்று
தாபத்தொடுகல்லாய்க்கிடக்குந்தகுதியெவன்கொனந்தலையுஞ்
சாபத்தினையுங்கண்டுபரதவித்துத்திருமினெந்தவித
மாபத்தடைவளென்றிதனையகற்றமனத்தினாராய்ந்தே. ... (௫௫)

கோகனகத்துத்திருவையும்வைகுந்தத்தையுமின்புறுஞ்சகல
போகத்தினையும்விடுத்துலகம்புரக்குந்தலைவனெனவிருந்தும்
பூகத்தொடுகற்பகம்பொலிந்துபொங்கியுயர்பொன்மலைமுடியின்
வாகுற்றிடுபுனிதத்தலத்தின்மாயன்சிலநாண்மருவினனால். ... (௫௬)

இவ்வாறென்றும்போகம்விடுத்திவைகற்புடையவிருந்தைபுக
லெவ்வாச்சாபந்தனைநினைந்துள்ளுடையுமாயன்றனைநோக்கி
மைவார்தடக்கணுகாயவாணிதேவதேவதுகிற்
செவ்வாய்ச்சலைசைநாதாநின்சிந்தைகலக்கந்தீர்வதற்கே. ... (௫௭)

தக்கவகையொன்றுளதுனதுசாபமிரண்டுந்தவிர்வதற்குத்
தெற்குவிசும்பினிடைப்பொலிந்தோர்சிந்துசையைவரையுதித்துப்
பக்ஷிபறவைமுதல்யாரும்படிந்தபேர்க்குக்கதியளித்து
பிக்கபாவமாந்தருவின்வேரைக்களையும்பொன்னியென்றே. ... (௫௮)

---

* உபலம்—கல்,

இலகுமதற்குத்தரதிசையினிறைக்குப்பதியாய்ப்புண்ணியங்கள்
பொலியுமிடமாய்க்காமியங்கள்பொருந்தக்கொடுக்குமகத்துவமா
யலகில்கற்பவிழுதியிலுமழியாவில்வனமெனவோர்
தலமுண்டதனிற்சாபமகாதாபபாவமாமிருட்கே. ... ... (௩௯)

எல்லாப்பரமபாவனமாமியமன்றடமுண்டவ்விடத்திற்
பல்லார்பணியப்பயந்தவிர்க்கும்பகவனென்னச்சம்புவென
எல்லாம்வளர்க்கவல்லாளோடிறைவருறைவரத்தலத்திற்
செல்லார்மேனியாய்போயச்சிவனைப்பணிந்துபூசைசெய்தால். (௪௰)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அக்கணத்தின்முக்கணத்தனருளினனவ்வாயிழை
வைக்குமிக்கசாபநீங்கிவாழ்வையென்னமாயவ
னெக்களிப்போடத்தலத்திசைந்துபத்திசெய்பவர்க்
கொக்கலாய்க்குளிர்ந்ததிங்களுதையகோடியென்னவே. ... (௪௧)

நன்மையாய்வளர்க்கவல்லநாயகிக்குநாதராஞ்
சின்மயத்துருப்பொலிந்ததேவர்தம்மைவிதியுடன்
பொன்மலர்த்திரட்கொடும்புகழ்ந்துபூசைசெய்துடன்
றன்மனத்துகந்தடுத்துதாழ்ந்துவீழ்ந்திறைஞ்சியே ... ... (௪௨)

மத்தகத்தினிற்றுணைக்கைவைத்துநாசமின்றியே
யத்தரானசங்கரன்பொன்னடிமனத்திருத்தியே
யொத்தநற்றியானமாயுறைந்தசெங்கண்மாயன்முன்
றத்துயர்த்தரங்கவாரிதாவுசொன்னவல்லிபோல் ... ... (௪௩)

ஒளிசிறந்தசெஞ்சடைக்குளுற்றவிந்துரேகையுங்
குளிர்களங்கனங்கிவெம்மைகொள்பதங்கனயனமும்
வெளிமிகுந்தபொடியணிந்தமெய்யுமூன்றுபுண்டரக்
*குளமுமந்தநகைநிலாவுகொள்ளலங்கலதரமும். ... ... (௪௪)

வெருவுமாலகாலநீலமேவுநீள்கிரீவமு
மரவிசைந்தகங்கணங்கலன்கள்குண்டலங்களும்
பரிதிகோடியொளிசிறந்தபடிகமானமேனியும்
வரிபுரந்தமற்புலித்*துவக்கணிந்தமத்தியும் ... ... (௪௫)

பத்தருக்குவரமுகந்தபயமளிக்குமத்தமுந்
தத்துழைக்கையும்பல்கோடிசம்பராரியுருவமு
நத்தமொத்தகாலனைச்சினத்துதைத்தபாதமும்
வத்துவாய்க்குணங்கடந்தவாத்தியானவுருவமும். ... ...(௪௬)

* குளம்—நெற்றி.
* துவக்கு—தோல்.

விளங்குமுச்செகத்தினுக்குமேன்மையானநாதராய்த்
தளங்கலாப்பொலிந்தலர்ந்ததாமரைப்பதத்தரா
யுளங்கனிந்துசத்தையாதியோதுமூன்றுவடிவராய்
வளங்கொள்சம்புவாய்மகேசராய்க்களாமயத்தராய் ... ... (௪௭)

கருணைபொங்குவிழியராய்ச்சங்கரனெனும்பெயர்த்தராய்
மிருடராயனுமயத்தராய்விளங்குசாந்தராய்ப்
பரையெலாம்வளர்க்கவல்லவட்குகந்தபாகராய்
மருவும்வில்வவடவிநாதர்வந்துதோன்றமாயனும். ... ... (௪௮)

அன்பினாலுகந்துகந்தடுத்தடுத்திறைஞ்சியே
யின்பமுண்ணிறைந்துபொங்கியேதளர்ந்தமொழியினா
லன்பர்நேயதேவதேவவம்பிகைக்குநாயகா
மன்பொலிந்தசேகராநன்மறையறிந்தசம்புவே. ... ... (௪௯)

விச்சுவச்சொரூபநித்தவிச்சுவத்துளானவா
விச்சுவத்தினதிகனேவிகாரனாரவுருவனே
நிச்சயச்சொரூபவோசைநின்றபிர்மசொரூபனே
யிச்சைமாயையைக்கடந்தவெண்ணுதற்குருதவா. ... ... (௫0)

தூலரூபவற்பரூபதூலவற்பரூபனே
மூலமாதியாறுதானமுங்கடந்தநாரனே
சீலமின்றியேசடச்செகஞ்சடத்துயிர்களாங்
கோலனேசடாசடத்தினுக்குமிக்கநாரனே. ... ... (௫௧)

காரணச்சொரூபனேயதைக்கடந்தவுருவனே
நேருமேகவுருவனேயனேகவுருவவேகமாய்ச்
சேரனேகமாகியுஞ்சிறந்திலங்குமுருவனே
யாருமைந்துகோசவுருவனேயதற்குமதிகனே. ... ... (௫௨)

யாறுகோசவுருவனேயவாறுகோசவதிகனே
வீறுதாகிவீறினுக்குவீறதானசுத்தனே
நூறுநுண்டுகட்குநுண்டுகட்களென்றசருவனே
தாறிலாப்பராபராசித்தானசங்கநாரனே. ... ... (௫௩)

காணத்தோற்றுமுருவமதனைக்காணுநயனவுருவனே
காணத்தோற்றுதற்குநோக்குகண்ணினுக்குநீண்டவா
பூணுமனதுவாக்கினும்புகாதகன்றநாரனே
கோணுமூனமியாறகன்றுகோதிலாதவுருவனே. ... ... (௫௪)

அண்டநளினம்போலும்புரியினரவந்தோன்றல்போலும்வெண்
கண்டவிப்பிதன்னில்வெள்ளிகாணல்போலுநின்னுழை
யண்டமூன்றுந்தோன்றுமாதலாலுநீயொருத்தனே
பண்டுநிச்சயன்பனீரிற்பரிதிவிம்பமென்னவே. ... ... (௫௫)

உலகுதோன்றலன்றிநீயொருத்தனாகுநின்னிட
மலியுமாயைநின்னிடத்தின்வந்தவடிவீரண்டுமே
புலவியின்றியொன்றோடொன்றுபொருந்தத்தோன்றுமுலகினி
னலகிலாதசெய்கையும்பொயாயமத்தியமைவதால். ... (௫௬)

பூதமுநிகழ்ச்சியும்பொருந்துமேனடத்தையென்
றோதுமூன்றுகாலமாகியுற்றிடுஞ்சதாசிவா
வாதியானநீயலாலிவண்டமென்றும்வேறிலை
யாதலாலுனக்குயர்ந்தவதிபர்யாருமில்லையே. ... ... (௫௭)

இற்றெழும்பசுக்களுங்களியாவுநீயவைக்கெலா
முற்றபேரெனப்புரந்துகந்தளிக்கும்பதியதாற்
சொற்றவாதினாலுனைப்பசுப்பதீயெனச்சொலு
மற்றவர்க்குமந்தநாமம்வாய்க்குமோகனாவினும். ... ... (௫௮)

தேவனேசெகம்பணிந்தசெம்பதத்தனேமகா
தேவனேதயாலயாவெனத்துதித்துநின்றனைச்
சேவடிக்கடைக்கலம்பதிந்தவென்றனைப்புரந்
தேவலாகத்தொண்டுகொள்வையென்றமாலைநோக்கியே. ...(௫௯)

அன்பர்நேயரானவில்வவடவிநாதருண்மகிழ்ந்
தின்பமாய்விருந்தைசாபமேகும்வாறுரைப்பம்நீ
மன்பதிந்தராமனாகுவாயவ்வேலைமாயையாம்
பொன்பொதிந்தமுடியினோக்கிப்புலம்புவாளச்சனகியும் ... (௬௦)

தக்கமாயனாமுனங்கிசத்திலேயோரங்கிசந்
திக்கிலுள்ளபேர்கள்பூசைசெய்யவேசிறந்தசா
லக்கிராமமாகுவாயெனப்புகன்றுமாறனை
யக்கணத்தனுப்பிலிங்கமாகிமெய்மறைந்தனர். ... ... (௬௧)

மைக்கொள்மாலவரனைமிக்கவாழ்த்தியும்வணங்கியு
மக்கணிந்தவன்சொலாற்றனங்கிசத்திலொன்றுசா
லக்கிராமமாகியேயிலங்கவந்தப்பூசையுந்
தக்கதென்றுமூன்றுலோகத்தாரும்பூசைசெய்வரால். ... (௬௨)

இலங்கிராமனுகமெய்யெடுத்தரக்கர்கோனுடன்
மலைந்தபோரின்மாயையில்லைமந்தகத்தைநோக்கியே
கலங்கிவாயிரங்கினொந்துகண்கணீர்சொரிந்திடப்
புலம்பினுண்மகம்புரிந்தபோழ்தழூவெழுந்தமின்

இந்தவாறினாலரீசரென்றுமன்னியற்பெய
ரந்தமானவில்வநீழலண்ணலுக்கியைந்ததாம்
விந்தையிவ்விலம்பகத்தைவிண்டபேர் கவர்ந்தபேர்
முந்தைவந்தபாவசாபமுந்தவிர்ந்துவாழ்வரால், ... (௬௪)

தத்துவமுணர்ந்துய்த்தவரேபூபுரமென்னுந்திவ்வியதலத்துக்குப் பிரமபுரமென்னும், அதிலெழுந்தருளும் பிரானுக்குப் பிரமேசரென்னும், பெயர்வரவை விரித்தனம். இனி அரியீசரென்னும் பெயர்வரவை விளம்புகின்றனம், கேண்மினென்று சூதபுராணிகர் விரிக்கின்றனர், வெள்ளியங்கிரியில் வீற்றிருக்கும்பரமன், ரத்னம்பதித்துப்பொன்னிழைத்த ஓர் மண்டபத்தரியணையில் தேவியுடனெழுந்தருளினர். அவ்வேலை அரியயனிந்திராதி தேவர் முனிவர் முதலிய சகலகணங்களும், வந்துபணிந்து, சிவபெருமானருணோக்கப்படியொருபுடைசார, தெய்வப்பெண்கள் வாசனைப்புகையும் தீபமும் காட்டிப் பொரிகளிரைத்துப் போற்றவும், சிலர் மலர்சாத்த சிலர் வாத்தியமுழக்க சிலர் ஹரவெனத் துதிக்க சிலர் நடிக்கவிருக்குமிந்நெருக்கத்தில், சிவபெருமானெற்றியிற்றோன்றும் வேர்வையைத் தனது சுண்டுவிரனகத்தாலெடுத்தெறிய வஃதோரசுரனாகவே, சிவபெருமான் பிரமனைப்பார்த்து, இத்தானவற்குத் தக்கபெயரும் விவாகமும் புனைந்து, ஓர் நகரம் படைத்து மணிமுடி தரித்துவாவென, அவ்வசுரனையிட்டுக்கொண்டு கடலிற்சென்று அவனது மாகமளாவியமுடியும் பாதலமுருவியவடியும் திசையை நெருக்கியவுடலையுங்கண்டதிசயித்துப் பிரமன் மந்திரநீர் கொடு சிசுவடிவாக்கி மடியிசையிருத்தி இவனுக்கியாது நாமமிடலாமென்றாராயுமயனது நெற்றியை, அச்சிசு கையால் வகிர அதினின்று சலம் வந்தமையால், சலந்தரனென்று நாமமிட்டு, ஓரியக்கன் மகள் விருந்தையை மணம்புரிவித்து அவன் பெயரால் ஓர் நகரமுண்டாக்கி மணிமுடி புனைந்து கைலாநாதனிடம் சொல்லியபிறகு அச்சலந்தரன் தேவர்கட்கிடர்செய அந்தேவர்கள் நாரதரையனுப்பச் சலந்தரன் கண்டுபசரித்து இங்குவந்ததுரையென, நாரதர் நகைத்து நின்புகழ்க்கியைந்த மனைவியிலளாதலின், உருவமிளமை நடை குணமுள்ளவளாய் நல்வழியில் வந்தவளாய் சிவனுக்கு மனையவளாயிருக்கின்றனள், அவளைக் கொணர்தியென்றருந்தவ

னேக அக்கலகத்தகப்பட்டவசுரன் மனைவிமொழி கேளாமல் இமையவர்கலங்கக்கைலையிற்சென்று குன்றுவில்லியைப்பொருதிய நாயகன் மடியாதிருந்தவஞ்செய்யும் விருந்தை கற்பில் வல்லமைகொண்டு வளர்வதைக்கண்ட மணிவண்ணன் மாயச்சன்னியாசிவடிவுகொண்டு மாணாக்கர் பலர் சூழ வருவதைக் கண்டெழுந்து தண்டனிட்டுத் தேவரீர் வர என்னபுண்ணியஞ்செய்தனனோவென்றுபசரித்து முக்காலமறியுந்தத்துவஞானியேமுத்தொழில்வல்ல நித்தனிடத்து யுத்தம்புரியுமெனது நாயகன் இறத்தல் பிழைத்தல் தோல்வி வெற்றி இவைகளிலொன்றையுரைத்தருளெனக் கண்மூடிச்சமாதியிருந்து கண்டவர்போல் நகைத்து நின்னாயகற்குயிர்ச்சேதமில்லை நஞ்சீடரையனுப்பி யழைப்பிக்கின்றன மென்றனுப்பி விருந்தையை நோக்கி நின்கணவன் வந்தபின் நின்மனையிற்புசிப்பமென்றேகி, அச்சலந்தரனைப்போலுருக்கொண்டு பின்னருமவளிடஞ்செல்லவே புருடன் வந்தனனெனமகிழ்ந்து ஸ்தாணாலங்காரஞ்செய்து இன்னமுதருத்திப்பாகிலையளித்துத் தானும் பொற்கலைநற்பணி பூண்டுமணிகளிழைத்த மஞ்சமிசைப்படுக்க, அவளைக்கண்ணபிரான் கட்டித்தழுவிக்கனியிதழருந்தி உடைநெகிழ்த்துக் கலவிசெய்து போகம் விளைத்தலாலவள் கற்புநிலை குலையவே கணவன் வலிகுலைந்து சிவன்றனது கால்விரற்றிகிரியாலறுபட்ட மணிமுடித்தலையையும் அவன் சிலையையும், சன்னியாசியாலனுப்பிய மாணாக்கர் கொண்டுவந்து முன்வைப்பக், கண்டவிருந்தை கலக்கங்கொண்டு நடுங்கிக் கபட்டில்வந்த மாயனைநோக்கி, என்னாயகன் போலுருக்கொண்டெனது கற்பழித்தமையால், நிமலவுரு நீங்கி நீகல்லாக, நின்றலையுஞ் சிலையுந்தறிப்ப நின்மனைவி கண்டேக்கமடையக்கடவதென்று சாபமியம்பி நாயகன்றலையும் சிலையும் கனலிற்பெய்து தானுமக்கனலிலேறினள், பின்பவ்விருந்தை தந்தசாபத்தால் மணிவண்ணன் கலங்கி நாம் நிமலவுரு நீங்கிக் கல்லாவதெவ்விதம். நமதுதலையுஞ் சிலையுந்தறிபடக்கண்டு திருமகளேக்கமுறுவதெவ்விதம், இதனையெவ்விதமகற்றல்செய்வோமென்றாய்ந்தமனத்தினனாய், திருவைப்பிரிந்து,பொன்மலைமுடியிற்சின்னாளிருந்தவ்விருந்தைசாபத்தாலுள்ளமுடைந்தருந்தவம்புரிந்ததிருமாலை,ஆகாயவாணி நோக்கிஹேசலசைநாயகா,சையயட்பிற்பிறந்திவ்வையம்பொலியத்தென்றிசைசெல்லும்பொன்றிகழ்காவிரிப்புண்ணியநதியின்வடபானண்ணிய வில்வவனமெனுந்தலத்திற்சென்றுயமதீர்த்தம்படிந்து வில்வவனேசனையு மெல்லாம்வளர்ப்பவளையும் பூசித்துவந்தால், விருந்தை சாபவிமோசனமாய் நன்மையுண்டாகுமென, அவ்வாறேநாரணன்சென்றுதீர்த்தமாடிப்பூசித்துத்துதிசெய்து, தனதிருகரங்களைச்சிரசிற்கூப்பி வில்வவனேசன்றிருவடியைச்சிந்தித்து நிற்குமாய

ன் முற்றுன்று மக்கடவுளை மாயன் கண்டு களித்து ஆனந்தபரவசனாய் வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சித் தத்துவநாமசங்கீர்த்தனஞ் செப்பி, அடியேனை நின்றிருவடிக் கடிமைகொள்ளென்றமாலை, மாயாவில்லவனேசன் மகிழ்ந்து நோக்கி, விருந்தையளித்த சாபமிரண்டில், ஒன்று நீ இராமாவதாரம் செய்வாயப்போதுநினதுமாயமான தலையையுஞ்சிலையையுங்கண்டுநின் மனைவிசானகிபுலம்புவள், மற்றொன்று நினதங்கிசத்திலொன்று உலகத்தார் பூசைசெய்யும்படி சாலக்கிராமமாகுமென்று புகன்று திருமாலுக்கு விடையளித்து, இலிங்கவுருவில் மறைந்தருளினர். பிறகு திருமால் பணிந்து துதிசெய்துஞ் சிவபெருமானுரைப்படி, அவன தங்கி சத்திலொன்று சாலக்கிராமமாகவே, மூவுலகத்தாரும் அதைப்பூசித்துவருகிறார்கள். இராமாவதாரமாயிராவணனோடு போர்புரியும் போது மாயச்சிலையையுந் தலையையுங்கண்டு ஜானகி புலம்பினள், இக்காரணத்தாலரியீசரெனப்பெயர்வந்த, இக்கதையை ப்படித்தவர் கேட்டவர்பாவசாப மொழிந்து மோட்சவாழ்வைப் பெறுவார்கள்.

அரியீசரென்னும் பெயர் வரவுச்சருக்கம் முற்றிற்று.

ஆ சருக்கம் க0-க்கு திருவிருத்தம் ௩௨அ.

உ

சிவமயம்.

பதினொன்றாவது
விப்பிரனுக்கு நேத்திரமருளிய சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இயல்பெறுவில்வவனத்தரனுக்கரியீசனென்ப்புவியிற்
பெயர்பெறுமேதுவிளம்பினமேல்விழிபெறவருளுதரெனப்
பயில்பெயர்வருமொருகதையுண்டதில் வெகுபக்கமிறைக்காகு
நயமுறுபுண்ணியமாமெனமுனிவரர்நத்தமொழிவர்சூதர் ... (௧)

கிட்டினைநதியோரத்தினிலுயர்சக்கிரவரமெனுநகரின்
மட்டடர்வேதமுதற்கலைகற்றறிமறையவர்பலரவரி
னிட்டையரன்பதபத்திபொறுமைமறைநிறைசிவசன்மனெனச்
சிட்டமறையவனவன்மனைபுண்ணியசீலமிருந்தவளாம். ... (௨)

சீலவதியெனநாமமிசைந்தவள் சேர்ந்திருவருமகிழுங்
காலையிலேவெகுவனிதைபிறந்தனர்கண்டுமகிழ்ந்திளமை
மாலுறுவன்னியர்தன்னைவரித்துயர்மணவிதிமுறைசெய்தார்
வாலிபமேகிழதுக்குறைவாய்மணமகனிடமவர்சென்றார். ... (௩)

புத்திரியாவருமவர்வல்லவர்மனைபுக்கியபின்னவர்தாம்
புத்திரரின்றியிரங்கியுமன்பொடுபூசுரருக்குநிதம்
மத்தமசனம்வத்திரமென்மணிமுதலாய்வெகுவிததானஞ்
சுத்தவிரதமுயர்தேவர்கள்பூசைதுவண்டுவருந்துதவம் ... (௪)

நித்தியமாகவியற்றுமவிருவர்நிகழ்ச்சியினாலும்பா
வத்தினுமோர்சுதனந்தகனாய்வரவதுகண்டவர்வெகுதுன்
பத்தினுமின்பத்தினுமுன்புண்ணியபாவமிதென்றினிமே
லெத்தொழில்செய்வதெனக்கருதிப்பினியைந்திடுவயதைந்தில். (௫)

நான்முறையாகமுநூலுமணிந்துமுன்னூல்பயில்விற்பவன்
மேன்மையதாமறை*சமைபனிரண்டுமிகுந்திடுமுன்கற்ற
தான்மதர்விழியுளகனிகைவிசாரித்தந்தகனெனவமையா
தேன்மலைவாகியலைந்தனமென்றுமிரங்கிவருந்தியுமே. ... (௬)

---

* சமை-வருடம்.

மனைவிதிருக்ககல்புத்திரனோடம்மறையவனிராட
றனைமனதுன்னிவளங்கள்விளங்கியதன்பதிவிட்டேகிப்
பனிநதிதடமரியரனுறைகோயில்பணிந்துயர்தனுனங்க
ளனுதினமருளொடுசெய்துயிமதலைக்கக்சமுறுதததனால். ... (எ)

அகமகிழ்வின்றிநடந்துதிரிந்தங்கஞ்சலையுங்காலை
மகிமைவிளங்கியநந்திசயிலமதில்வந்துபிறனுகினிநீர்
வெகுபுனிதம்பெறசூழ்கியவுழையொருவில்வமரத்தடியின்
வயிர்வரியுழுவையினதளாதனமிசைவடமாநிழலிறைபோல். ...(அ)

சடைமுடிபொடியுடதிரிபுண்டரநுதறக்கியவக்குமணி
*வடமுறைபுயமிசைமரவுரியிடையுடன்மலர்விழித்தனைமூடி
யுடன்மிசையுங்கூடமனம்பற்றுதுத்தமமகிமைபெறு
திடமூளதவநித்தியவானந்தத்தேசிகனைக்கண்டே. ... ... (கூ)

உளமகிழ்வொடுமனையவண்மகவொடுமுனியுழைசென்றன்புகனிந்
திளகியமனதுடனஞ்சலிசெய்தவனெதிர்நிற்கமுகுர்த்த
மளவுமதன்பின்முனிவிழிமலர்தரவடியில்விழுந்தவரை
யளிவிளைதவநித்தியவானந்தனழைத்துயர்வேதியனே. ... (கய)

எவ்விடம்விட்டிங்கெய்தினையினியேகுதலெவ்விடமென்க
வவ்வியமின்றியசிவசன்மாவெனுமந்தணனும்புகல்வா
னவ்விவிளங்கியகிட்டினையருசொருநகர்சக்கிரவரமென்
றெவ்வுலகுந்துதிசெயவுண்டந்நகரெய்தியிசைந்திடுநாள். ... (கக)

*எங்களிடத்தமுதம்பலவுருவெனவேய்ந்தவெழிற்சுதைகள்
பொங்கவுதித்தனரங்கவர்தம்மைப்போற்றிவளர்த்துவருந்
துங்கமிகும்வன்னியர்கட்கருமறைசொல்லியவணமீந்தே
மங்கலமுற்றவரவர்வல்லவர்மனைமன்னினபின்னயர்வாய். ... (கஉ)

*பலபுத்திரிபெற்றென்னோர்புத்திரபாக்கியமில்லையென்னிற்
றலமுந்தனதானியமுமினம்பலசம்பத்தும் பெற்றென்
னிலகுமிகப்பயனும்பரபயனுமெய்தாதெழுமையினு
நலனும்விளங்காகுலனும்விளங்காநரகப்பயனுகும். ... ... (கரு)

*கந்தமிலாமலர்திங்களிலாநிசிகற்றறிவுறுபுலவர்
குந்தலிலாவவைகண்களிலாவுடல்கொங்கையிலார்சயன
மைந்தனிலாமனையென்றுவமிப்பவர்வாய்மையினுறுமொழியைச்
சிந்தையி லுன்னினைந்தனம்யாதாற்சேயடைகுவமென்று. ... (சச

*எண்ணியதைத்தரும்புண்ணியமொன்றேயென்றெண்ணிப்பலவாம்.
புண்ணியமுய்த்தனமந்தகனுமொருபுத்திரனுற்றனன்முன்
பண்ணியவினைநண்ணியதென்றோம்பிப்பகர்வயதைந்தினினா
னண்ணியவிதிமுந்நூலணிவித்துநலந்தருமறைபயில. ... (௧௫)

*ஆண்டீராறிலருமறைகற்றனனாயினுமந்தகனு
யீண்டியதாற்பலகனிகைவிசாரித்தியையாதேங்கிமனம்
வேண்டியநதிபலமூழ்கித்தானம்விதித்தரியானுறையுங்
காண்டகுதானங்கண்டுஞ்சேய்க்கிருகண்களுருததனால் ... (௧௬)

*முகமுமெலிந்தகமகிழ்வுமிழந்துமுயற்சிதருங்கால
மகிமைவிளங்கியநின்னடிகண்டுவணங்கினனின்னருளாற்
சுகமுறவிருவிழிபெற்றிமதலையுந்துயரகல்செய்வாயென்
றகமகலந்தணன்மொழியவுநித்தியவானந்தனெனுமுனி. (௧௭)

அச்சிறுவன்பயன்முற்சன்மவினையறிந்துதெளிந்தறைவா
னிச்சகமிசைகொங்கணமெனநாமமிலங்கொருதேயமதின்
மெச்சியபாடலிபுரமெனுநகருறைவிப்பிரனிவன்வெகுபேர்
துச்சனெனமறைபயில்வோர்தம்மைத்துடித்ததிமதமாய். (௧௮

மனைதன்மகவில்லவளொடுகூடமகிழ்ந்துயர்புண்டரமிட்
டனகமெனும்பொடியக்குமணிச்சரமன்றிநிரஞ்சிவநிந்
தனையவரடியவர்தனைநிந்தனையொடுதாழ்வுமொழிந்துயர்வோர்
புனைபுண்டரமிட்டவரெனவுணவுபொருந்தவளித்தரனார். (௧௯

அடியவராயக்குமணிவிபூதியணிந்தவரைக்கண்டால
வெடிகுரலொடுகிட்டினகிட்டினவெனவிண்டிருகண்மூடிக்
கொடுநெறிசெய்வதினாலவன்மனையிற்கோதறுகலையுணர்வோர்
விடமணிசிவனடியாருயர்மறையவர்மேவிலரவ்வேலை (௨௦

உச்சிப்பொழுதிற்பசிதாகத்தினுழன்றுபின்மாணாக்கர்
நச்சக்கண்ணுவமுனியசனத்தினைநண்ணியவன்மனையை
மெச்சிச்செல்குமுனவனிவரதுசிவவேடமதைக்கண்டே
தச்சிற்செய்தகவாடமடைத்துச்சடிதியினுட்போனான்; (௨௧)

ஷை-வேறு

அப்படிச்செலுமவனைமிக்கவதட்டிமுனிவொடுகண்ணுவர்
விப்பிரர்க்குளிகழ்ச்சிபெற்றிகழ்வேட்டுவாபசிதாகமா
யெயப்பிளைப்பொடுவந்தநம்மையிகழ்ந்ததாலுமுருத்திராக்
கப்பருஞ்சரம்வெள்ளைநீறணிகடவுளன்பரைநிந்தனை. (௨௨)

பேசகந்தையினாலுமினிநீபிறவியந்தகனென்னவே
யேசயாவருமூன்றுசன்மமெடுப்பையென்றுசபித்தலூர்
வாசவிப்பிரரன்புசெய்யமகிழ்ந்துசென்றனரவனுமவ்
வாசுகொண்டிருசன்மமந்தகனாகிபிச்சனனத்தினின். ... ...(௨௩)

நற்றவஞ்செயுமுங்களுக்கிருநயனமின்றியசேயதா
யுற்றனன்சிவபத்திசீலமொழுக்கமுளவுங்கட்குவின்
புற்றமகவெனவந்ததால்விழிபொருந்துமவ்வழிபுகலுவாங்
குற்றமற்றுயர்தக்கணக்*ககுபப்புவிக்கொருகங்கையாய். ... (௨௪)

சையமால்வரைவிட்டிழிந்துசகத்தினைப்பரிசுத்தமாய்ச்
செய்யவினைவிளையாதகத்திரடரமகிமைவிளங்கியே
துய்யகாவிரியென்னவோர்நதிதோன்றும்தற்குவடக்கினின்
வையகம்புகழ்வில்வவனமெனமகிமைகொண்டதிபொங்கமாய். (௨௫)

அட்டசித்திபலிக்கவேத்திரமாகியோர்பதியுண்டதி
னெட்டுமாதிரஞ்சூழுலகினின்யாரையும்புனிதஞ்செயு
மட்டிலாதமகத்துவத்தொருமறலிதடமுண்டவ்வுழை
வட்டமாகியநீவிர்சென்றவ்வரன்றடத்தினின்மூழ்கியே. ... (௨௬)

ஈசராய்முற்றும்வளர்ப்பவளிறைவராய்வில்வாடவி
வாசராய்வளரிறைவர்பாதம்வணங்கியேற்றியுமனமகிழ்ந்
தேசமாதிசெய்தவ்விடத்திலிசைந்துவாசமுறைந்திடின்
மாசுகொண்டவுன்மைந்தனுக்கவர்மலரும்விழியிணையருளுவார்....(௨௭)

என்றமுனியையிறைஞ்சியிருவருமெச்சமோடுமெப்பதிதனிற்
சென்றுமறலிதடம்படிந்துதுதிக்குமன்பர்தழைக்கவே
நன்றுவரமருணீடுவில்வவனத்தின்மேவியவத்தரோ
டொன்றியாவும்வளர்க்கவல்லவளுபயபாதமிறைஞ்சியே. ... (௨௮)

துதிபுகன்றரனைச்சமாதிதொடங்கிநின்றுதினந்தின
மதியின்வைத்துவணங்கியுஞ்சிலமாதமங்கணிருப்பவத்
திவணக்கமுழுக்கினாற்பரிசுத்தமாயரனருளினான்
மதலையின்புறவிழிதெளிந்துவயங்கவவனுமவரனையே. ... (௨௯)
யார்த்துமகிழ்வுடனின்பவாரிபடிந்துகந்தமனத்தொடுந்
தோத்திரஞ்செயவன்னைதந்தைதுதித்தரன்றனையேத்திமேற்
கோத்திரங்குணமழகுசீலமிருந்தகன்னிகைதேடியே
சாத்திரப்படிவதுவைசெய்துதழைத்துமுறைமுறையாகவே. (௩0)

---

* ககுபம்-திசை.

சகலபோகமருந்தியங்குதழைத்துமுத்தியுமுற்றனர்
மகிவிளங்கிடசுதன்மகிழ்ந்திடமலரிணைக்சணளித்ததா
விகல்படைச்குமவரனைவிழியருளீசனென்றுவழுத்துவார்
மகிமையுற்றிடுமேழுமாதர்கள்வந்தவகையும்விளம்புவாம். ... (௬௧)

என்றசூதரைமுனிவர்மானையெடுத்தணைத்தருள்வன்னிசெய்
கின்றதென்னவதற்குமேலிதுகிளத்தலாமெனச்சூதரு
நன்றெனப்புகழ்ந்தவன்னிடத்தையங்குதவஞ்செய்தே
யென்றுமின்புறுவீடுவில்வவனேசரருள்கொண்டெய்தினன். ... (௬௨)

உலகம்பரவும் வில்வவனநாதனுக்கு, அரியீசனென்னும் பெயர்வரவுரைத்து விழியருளீசரெனப்பெயர்வரவை விரிக்கின்றனமென்று சூதபுராணிகர் முனிவர்களுக்கு விளம்புகின்றனர், கிருட்டினை நதியருகில் சக்கிரவரமென்னுநகரில் வசிக்குமந்தணருள், பத்திநிறைந்த சிவசன்மனென்னுமோர் மறையவன், சீலவதியென்னுமனைவியுடன் மகிழ்ந்துசேருங்காலங்களிற்பிறந்தபெண்கள் பலரையும் வளர்த்து அமையும்பருவத்து, வன்னியர்கட்கு மணம்புரிவித்து, அவரவர்மனைக்கனுப்பியபின், சந்திரனில்லா வானம்போலுமைந்தனில்லாத மனையென்று புத்திரனில்லாமல் வருந்தி, தவந்தானம் தருமம் பலவற்றைச்செய்த நல்வினையினும், முற்செய்ததீவினையினும், நேத்திரமில்லாது, ஓர் புத்திரன் பிறக்கப்பெற்றோரிருவருந்துன்புற்று, பாவபுண்ணியப்பயனென்று மனக்கலக்கத்தோடம்மகவைவளர்த்து, முந்நூல்புனைந்து, தொன்னூல் துவக்கி வேதமுற்றுஞ்செவியாலுணர்ந்து வல்லவனாகிப் பன்னிருவயதில் நன்மணம்புரியக்கன்னிகை விசாரித்து, அந்தகனுக்குதவினிசையாது, எனவலந்தனமென்றிரங்கிய தாயுந்தந்தையு மிப்புத்திரன் விழிபெறும் விதந்தேடவேண்டுமென்று யாத்திரைசெயக்கருதி மூவரும் புரம்போந்துபலபுண்ணிய தீர்த்தங்களிற்படிந்து, அங்குள்ள சிவஸ்தலம் பலவற்றைப்பணிந்தும் புத்திரன் விழியுறாமையால், வருந்தியங்கலையும்போது, மகிமைதங்கிய, நந்திமலையின் பிநாகினிதீர்த்தம்படிந்து, ஓர்வில்வமரநிழலில் புலியதளில் வடகீழலினுறையுந் தட்சணாமூர்த்திக்கடவுள்போலும், கண்மூடி, நிட்டைகூடிய நித்தியானந்தயோகீச்சுரனைக்கண்டு மூவரும்பணிந்து அன்புகனிந்து நேர் நிற்க வோர்முகூர்த்தநேரங்கடந்து கண்மலர்ந்தமுனிவனடியையமற்றும் பணியக்கண்ட அருள்சுரந்த அம்முனிவன் அன்புமுதிர்ந்த அவர்களை நோக்கி, எங்கிருந்து வந்தீர், இனியேதுதலெங்கெனவே, அச்சிவசன்மன் ஆதியோடந்தமாக நடந்தவை முற்றுமொழிந்து, முயற்சியால் முடியுங்காலம்வர, நின்திருவடி சார்ந்தனம், தேவரீர் திருவுளமிரங்கி; இப்புத்திரனுக்கு விழியருள் செயல்வேண்டுமென்றிரக்கவே, அம்முனிவன். முற்செய்வினைதெரிந்து மொழிகின்றனர்.

கொங்கணதேயத்தில் பாடலிபுரமென்னுநகரில் வசித்தபிராமணனாகியவிவன், மதத்தினால், மறைபயிலு மறையவரைத்தூஷித்து, மனைவிபுத்திரன், இவர்களை விபூதிருத்திராக்கமணியாது, நெற்றியிலூர்த்தபுண்டரநதரிக்கச்சொல்லித்தானுந்தரித்து, சிவநிந்தனை அடியவர் நிந்தனைசெய்து ஊர்த்தபுண்டரந்தரித்து வருபவர்க்குவைவளித்துச் சிவசின்னந்தரிப்பவரைக்கண்டால் இடித்த குரலொடு கிட்டின கிட்டினவென்று கண்களை மூடிக்கொடிய பாதகஞ்செய்ததாலிவன் மனையில்பெரியவர் மறையவர் அடியவரிவர்கள் மேவாது வருங்காலத்துச்சிப்போதில் பசிதாகத்தால்வருந்திச் சீஷர்கள் சூழக் கண்ணுவமுனிவர் அமுதுண்ணும்பொருட்டு, இம்மறையவன் மனையிற்செல்குமுனிவரது சிவவேடங்கண்டு கதவடைத்துப்போகக்கண்ட முனிவரதட்டி, விப்பிரகிராதா, பசியிளைப்பில் வந்தவெம்மை மதியாது சிவநிந்தனை செய்ததால் நீ,மூன்றுசனனம் பிறவியந்தகனாகப்பிறக்கக்கடவையெனச் சபித்து மற்றப்பிராமணரமுதுசெய்விக்கப்புசித்து மகிழ்ந்துசென்றனர். பின்பச்சாபத்தை யேற்றபாதகப்பிராமணன், இரண்டு சனனமந்தகனாகப்பிறந்து, இச்சனனத்தில், நற்றவஞ்செய்யுமுங்களுக்குப்பிறந்த, இவ்வந்தகப்புத்திரன், விழிபெறும் விதம்புகல்கின்றனம்.

தக்கணதிசைக்கோர் கங்கையாகச் சையையினின்றிழிந்து உலகத்தைப்பரிசுத்தஞ்செய்து பாவங்களைப்போக்கி மகிமைமிகும்பொன்னிநதிக்கு வடக்கின்கண், சகலசித்தியுந்தந்து புகழைப்பெறும் வில்வவனமென்னுந்தலத்திற்சென்று மகத்துவமிகுந்த மறலிதீர்த்தம்படிந்து, யாவும் வளர்ப்பாள் பாகனாகிய வில்வாடவிவாசன்றிருவடிவணங்கித்துதித்து நிட்டைகூடிச்சிலநாளங்கு தங்குவீராயின், உங்கள் புத்திரனுக்கு விழிதந்தருளுவரென்ற முனிவனை வணங்கி மூவரும்,அப்பதியிற்சென்று யமதீர்த்தமாடி, வில்வவனேசரையுஞ் சர்வரட்சகித்தாயையும் பணிந்து துதித்துச்சிலநாள் தங்கவே, அத்துதியினும், வணக்கத்தினும் முழுக்கினும், பரிசுத்தமாய்ச் சிவபிரான்றிருவருளால் விழிமலர்ந்த புத்திரன் மகிழ்ந்துதுதிக்கவேபெற்றவருந்துதித்து,எண்ணியபயனைப்பெற்றபின், கோத்திரங்குணம் நடையழகு முதலியவற்றிற்சிறந்த, கன்னிகைதேடி, அப்புத்திரனுக்கு விதிப்படி வதுவைச்சடங்குசெய்து பேரின்பமுற்று, அங்கு முத்தியும் பெற்றனராதலினக்கடவுளுக்கு விழியருளீசரெனப்பெயர் வந்ததனவென்ற சூதமகாவடிகளை, மாணைப்புரந்தவன்னிசெய்கையென்னவென்றமுனிவருக்கு, அங்குதவஞ்செய்து வில்வவனேசரருளினாற் பேரானந்தவீடுபெற்றனனென்று சொல்லியருளினர்.

விப்பிரனுக்கு நேத்திரமருளியசருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம ௧௧-க்கு திருவிருத்தம் ௩௯௦.

உ

சிவமயம்.

பன்னிரண்டாவது
சத்தகன்னிகள்வரவுச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எனவிண்டுமாதரெழுவோருமங்கணியையயேதுசூதர்மொழிவார்
முனநன்குறுந்திரேதாயுகததின்முனிவீர்கள்கேளுமொருநாள்
மனமீதினாதரவினோடுமேழுமடமாதர்கூடியவர்வா
கனமீதிலேறியங்கங்கிலங்குஈகனஞ்சகங்கணகரம். ... ... (௧)

தடமோடைகூபமிமலஞ்சிறந்தசலமண்டர்தங்கியதலம்
படகந்தரங்குவடுதுயயவையர்பவனம்பொலிந்தநிகண்
டெல்சிந்தையும்புளகிதஞ்சிறந்துவகையாய்வியந்துவருகாற்
புடைகொண்டகோமதிநதிக்கடுத்தபுனைநாளிகேரம்வகுளம். (௨)

பணைபிண்டிசூதமீந்தாலம்வாழைபனசங்கடாரைதிலகஞ்
சினைகொண்டுயர்ந்தமந்தாரைகோங்குசெறிசண்பகங்கமுகுசந்
தனமாதுலங்கமகில்வில்வம்வஞ்சிதழைபாடலங்கடளவ
நனைகொண்டசாதிகமழ்கொண்டிலங்குநளினங்கொளோடைவளமும்

குயில்கிள்ளைகூவுமொழியுஞ்சிறந்துகுறைவின்றிமிக்கவெழிலா
முயருந்தவத்தின்மிகவுந்திறத்தவுந்தாலர்நந்தவனமேன்
மயல்கொண்டுசென்றுகனிகண்டருந்திமலர்கொய்தணிந்துமதுவுண்
*டயமேலிறங்கியமலங்கலங்கவதிபோதகந்தைசெயவே. (௪)

அதுகண்டிலங்குமுந்தாலனென்னுமறவன்சினந்துநயனங்
கொதிகொண்டவங்கியெனவேசினந்துகுளிர்நந்தவஞ்செய்காவை
மதிமிஞ்சிவந்துமதியாதழிக்கும் வகையானவுங்கணொட்டு
விதமானசிததியலியாதெனச்சபித்தார்தவத்தைமெய்த்தார். (௫)

அக்காலைமாதரெழுவோரும்வெட்கியலமந்துழன்றுமெலிவாய்த்
திக்கானனத்தனருகேகியெங்கடிறமாகுமட்டசித்தி
தக்காமலேகவுந்தாலரிட்டசாபந்தவிர்த்துமுன்போன்
மிக்கானசித்திபெறுமாறெமக்குவிள்வாயெனப்புகலவே. (௬)

---

*அயம்—தடாகம்

அவ்வேலைவேதன்மதியுன்னிமாதரனைவோருமின்பமுறவே
யவ்வாதநித்தனெல்லாமுணர்ந்தவன் சங்கரன்பொறையினன்
செவ்வானமுக்கணிறையன்றிவேறுசிலர்பாரினில்லையவனே
யொவ்வாதசத்திபெறுமாறுரைக்குமுபதேசகர்த்தனதனால். (எ)

ஒருசிந்திலங்குதென்பாரினுண்டிவ்வுலகெங்கணும்புனிதமாம்
வரையென்றசையையநின்றிழிந்துவழிகின்றபொன்னியெனவே
வருமந்நதிக்குவடபாலிறைக்குமகிழ்வானவில்வவனமுண்
டருகாமதற்குளகமுற்றுமஞ்சியகலும்படிக்குமறலி. ... (அ)

தடமுண்டதன்கண்வில்வாடவீசர் தழைமந்திரம்பொலியுமவ்
விடைதென்றிசைக்குளடியார்கணேசனெனவே நினைத்ததருள்வோன்
வடநீழலிற்கமையினோடுதெற்குவடிவாயிருக்குமவர்பாற்
றிடமாயடைந்தவரைவேண்டிலுங்கடிரமானசித்திதருவார். (கூ)

வேறு.

என்றுவேதன்புகலவுடனேழுமாதர்களுமினிதாமிதென்றுமகிழ்வாய்
நன்றுதருசகலசித்திக்குமொருதாவென்னுநல்லவில்வவனத்தினிற்
சென்றியமகுண்டத்தினீராடியெல்லாஞ்சிறந்திடவளர்க்குவல்லாண்
மன்றல்புனைசங்கரரெனும்வில்வநாதரிருமலரடிபணிந்தவர்க்கே. (௧0)

தென்பாலினமுநகலசஞ்செழுந்தழலரவுசேர்பொத்தகந்தரித்தே
யன்பானசீதளக்கடைவிழியுடன்சித்தமைந்தமுத்திரைபிடித்தே
மன்பாரழிந்தாலுநாசமில்லாதென்றுமகிழ்தக்கணனனத்தன்
முன்பாயுறைந்துகண்டடியிணைவணங்கிநன்முடிமிசைகரங்குவித்தே(௧௧)

தேவதேவேசசசிசேகராவன்பர்கள்செழிக்கப்புரந்தகுருவே
காவலாசித்துமுத்திரைவிளங்கியமலர்க்கையாகுணங்கடந்தோய்
மேவுபசுபாசகரசீதளக்கடைநயனவீக்கணமுற்றுமுணர்வோ
யேவல்புகல்குருவினுக்குங்குரவனுனவாயேழையார்க்கைகந்துதருவே.

சீருறுகுகாலயாசிவவுருவுகொண்டிலகுதெக்கணமூர்த்தியேயென்
றேருறுந்துதிபலவுரைத்துன்னையேயடையுமெங்களைக்காத்துகந்தே
வரரமொடெழுந்தாலர்சாபத்திறலேகிமடிவானசித்திமுன்போற்
சேரவுபதேசமுறையென்றவெழுமாதர்முன்சித்திபெறவேபுகன்றூர்
(௧௩)

இவ்வாறுதக்கணமூர்த்தியருளாற்பின்னுமெட்டுவகையானசித்தி
மைவார்கண்மாதர்களடைந்துருவமொளிவலிசிறந்தவரைவிட்டேகவே
யொவ்வாமனத்தராயன்புகொண்டவர்முனமுறைந்துயர்கணங்களொங்
[குங்
கவ்வாதரற்றியானத்தவம்புரிவரெழுகன்னியர்களின்னமாதோ. (௧௪)

அன்புமுதிர்ந்த அருந்தவமுனிவர்கட்குச் சூதபுராணிகர் வில்வவனமென்னுந்தலத்துக்குச் சத்தகன்னிகள் வரவுரைக்கின்றனர். திரேதாயுகத்திலோர் ஞான்று சப்தமாதர்கள் தமதிச்சையால், தந்தம்வாகனமீதேறி நினைத்தவிடங்களிற் சஞ்சரித்து, கோமதிநதிக்கருகில்: புட்கள் புலம்பும் பூக்கணிறைந்த பலதருக்கள் பொலிந்து செழிப்புற்ற, உந்தாலமுனிவரது நந்தனவனத்தை நண்ணி, அதிலுள்ள கனிகளைப்பறித்தருந்தி, மலர்களைக்கொய்தணிந்து, மதுக்களைப்பானஞ்செய்து, ஆங்குள்ள தடாகத்தைக்கலங்கச்செய்யுமகந்தையை, உந்தாலமுனிவர் கண்டு அக்கினியெனக்கண்சிவந்து சோபித்து நமதுகாவைமதியாதழித்தவுங்கட்குப்பலிதமாகிய அஷ்டமாசித்திகளும் பலியாமற்போகக்கடவதெனச்சபிக்க, அச்சப்தமாதர்கள் வெட்கி மயங்கித்தலைகுனிந்து பிரமதேவனிடஞ்சென்று, முனிவர் தந்தசாபங்கழிந்து முன்னம்போலச், சித்திகள் சித்திக்கும் வகைபுகலவேண்டுமெனவேண்டவே, அப்பிரமன் யோசித்து முற்றுமுணர்ந்த சங்கரக்கடவுளன்றி, உங்களுக்குச் சித்தியையாவரீயவல்லவர். அவர் உபதேசகர்த்தராதலால் தென்பாரில், உலகத்தைப்பரிசுத்தஞ்செய்யச் சையையினின்றொழுகும் ஒப்பற்ற பொன்னிநதிக்கு வடபால், அழகிய வில்வவனமென்னுந்தலத்தில், பவத்தைப்பரிகரிக்குமகத்துவயமதீர்த்தமாடி, வில்வவனேசரைத்தரிசித்து, அவ்வாலயத்தில், தென்முகநோக்கி வடநிழலிருந்து, வேண்டுவார் வேண்டுவதையீயவல்ல, தட்சணாமூர்த்தி சந்நிதியிற்சென்று பணிந்து வேண்டுவீராயினுண்டு பெறுவீரெனவே, அத்தலத்திற்சென்று நீராடி, சர்வரட்சகியையும் வில்வவனேசரையுந்துதித்து, தென்பாற்பொலியுந் தட்சணாமூர்த்தி சந்நிதியிற்சென்று திருவடிவணங்கி, முடிமிசைக்கரங்கூப்பி அக்குரவனது சீர்த்தியைத்துதித்து, அடியேம் உந்தாலமுனிவர் சாபமொழிந்து, முன்னம்போலஷ்ட சித்திபெற்றுய்யும்படியருள்செயவேண்டுமென்ற அம்மாதர்களுக்கு, அஷ்டசித்தியையுமுபதேசஞ்செய்தருளிய பின், அம்மூர்த்தியை விட்டுப்பிரிய மனமில்லாராய் அவர் சந்நிதிமுன்னர் நாளுந்தவஞ்செய்துகொண்டிருக்கின்றனரென்றுரைத்தனர்.

சத்தகன்னிகள்வரவுச்சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் கஉ-க்கு திருவிருத்தம், ருஎ௯.

உ

சிவமயம்.

பதின்மூன்றாவது
எல்லாம்வளர்க்க வல்லவளென்ற பெயர்வரவுச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்றசூதரைமுனிவர்வில்வவனமகிமையெல்லாமுணர்ந்தோமின்னமுண்
டொன்றந்தவகையாதெனிற்பரைக்குப்பெயருகந்துயாவும்வளர்ப்பா
ளென்றுபெயர்வந்ததென்னென்றுசொலவேசூதரின்பமோடவகையுரை [ப்பார்
மன்றல்செறிவில்வவனமட்டலாமுன்கோள்கண்மாறுபாட்டால்வறண் [டே. (க)

வருடமில்லாதுநதிவாவிகூபந்தடமும்வற்றிநீர்பயிர்பசும்புற்
றிரணமுதலின்றிப்பசுக்கண்மானிடர்பறவைசேரவுமடிந்துசிலபேர்
புரம்விடுத்தங்கங்குசெல்கவேனையரெலாம்போந்துவில்வாரணியமே
சரணமென்றரைகூடிபுகையகலமாகுந்தலங்களெல்லாம்பரவவே. (உ)

தன்னதுதலத்தின்வந்தெய்தித்தவிக்குஞ்சனங்களைமகிக்கெலாமோ
ரன்னையெனுமம்பிகையருட்பார்வையானோக்கியக்கணநீலமேக
மென்னவுருவங்கொண்டுதன்னதுதலத்தெல்கையாவுமழைபொழியமுன் [போன்
மன்னுநீர்பயிர்புற்றிரணமாந்தர்பறவைபசுவர்த்தனையதாகும்வகையால்.

மலைமகட்கெல்லாம்வளர்க்கவல்லவளென்னமன்னுதிருநாமமெய்துந்
தலமதிலுயர்ந்தவில்வாடவியினீழலுறைசம்பியமனங்கிதீர்த்த
மிலகும்வகையாவும்பொழிப்பாயகந்தொலையவேயியம்பினமிக்கதை
நலமொடுபடித்தவராருந்தினர்மதலைகல்விநவமணிதனந்தானியம். (ச)

பெருகமறையோதுபடிவாழ்ந்துபின்சிவபதம்பெறுவரந்தத்தலத்தின்
பரிவுசிவபத்திமிகுவிப்பிரர்க்கசனநீர்பசும்பொனுடைதானியங்கள்
பரிவுடனளித்தபேர்பலனையரிபிரமனும்பகர்வதற்கெளிதல்லமற்
றொருதலத்தினினூறுவிப்பிரற்காறுசுவையுடனன்னமிட்டபலனும். (ரு)

கலித்துறை

அப்பதிதனிலொருமுட்டியளித்தவர்பெறுபலனுக்
கொப்பலவதனுன்மகிதனிலுயர்வில்வக்காவுக்
கப்பணியச்சிவனுக்கவரனைசத்தியுமைக்கு
முப்புவனத்திலுமினையிலைமுக்காலத்திலுமே. ... ... (சு)

இத்தலவைபவமுற்றும்மெழுதிப்புத்தகமாய்
வைத்தர்ச்சனைசெய்தத்தனைமனதுன்னிவணங்கும்
பத்திச்சதுர்மறையோர்கள்படிக்கும்படியீந்தாற்
சித்தத்தினினைக்கும்பொருள் சேர்ந்தேசிவமடைவார். ... (௭)

இச்சரிதைபுகலும்வேதியரின்புறநற்கந்த
மச்சுதமுடைகாதணியங்குலியங்கடகமுதன்
மெச்சியவணிதனதானியமிகுமன்புடனருளி
யுச்சிதயானங்கந்துகமும்பண்மிசைவைத்தே. ... ... (௮)

அன்பொடுநகர்வலஞ்செய்வித்தனமுங்கொடுப்பார்க
ளின்புறுமெல்லாவகமுமொழிந்துசுகம்பெறுவர்
பொன்பரிவொடுசூழச்சந்ததமுமிப்புவியி
லின்புறுமுயர்போகந்துய்த்திறைபதமடைகுவரால். ... (௯)

அதனுலிகபரம்வேண்டினராற்றன்மிகச்செய்துந்
துதிசெய்துமகிழ்ந்தன்பொடுசுருதிக்கிறையவர்பரன்
முதிராவமுதாமிக்கதைமுழுதுங்கவர்வார்க
ளிதுசத்தியமிதுசத்தியமெனுஞ்சூதரைமுனிவோர். ... (௧௦)

சந்தனமச்சுதமலர்கனிதகைவற்கலையாலுஞ்
சிந்தையின்மலியன்புடனர்ச்சிக்கவுமகிழ்வாயவ்
வந்தணரிடைவிடைகொண்டுபுராணக்கடலாகிச்
சந்ததமுயர்சூதத்தவர்தங்*தாபதஞ்சார்ந்தார். ... ... (௧௧)

கலிவிருத்தம்.

* உலகமேத்துமொருமுதல்வாழியவ்
வுலகெலாம்வளர்த்தோம்புவள்வாழியோ
யுலகினுன்மறையோர்களுஞ்சைவரு
முலகில்வாழ்பல்லுயிர்களும்வாழியே. ... (௧௨)

திவ்விய வில்வவனமென்னுந் தலத்திற் சத்தகன்னிகள் வரவுரைத்த சூதமகாமுனிவரை முனிவர்கள் வணங்கி, அடிகள் சொல்லிய தலதீர்த்த மூர்த்திவிசேடமியாவுமுணர்ந்தனம், உணராததின்னமொன்றுண்டு. அஃதியாதெனின் கைலாயத்திருந்து சிவபெருமானோடு விடையூர்ந்து வந்து அத்தலத்தெழுந்தருளிய தேவிக்கெக்காரணத்தாலெல்லாம் வளர்ப்பவளென்னாமமியைந்ததென்பதென்ற முனிவர் கட்குச்சூதமுனிவர் புகல்கின்றனர். முற்காலத்தில் நவக்கிரகங்கள் மாறுபட்டு மழையின்றிப் பூமிவறண்டு நதிவாவிகூபமுதலியவைவற்றி பயிர் புல் பூண்டு

---

*தாபதம்—முனிவரிருப்பிடம்.

முளைத்தலின்றி, மனுடர் பசுமுதலியவிலங்குகள் பட்சிகளிவைகட்குணவின்றிச்சிலமடியசிலதூரதேயங்களுக்குச்செல்ல சிலவில்வாரண்யமே சரணென்றடைந்து தவிப்பக்கண்டு இவ்வுலகுக்கோர் தாயாகியவம்பிகையானவள் கிருபாநேத்திரத்தானோக்கி, அக்கணமே நீலமேகவுருக்கொண்டு மழையைப்பொழியவே, முன்னம்போல் நீர் பயிர் புல்பூண்டு மனுடர் விலங்குகள் பட்சிகள் வர்த்தித்து மகிழ்ந்து செழிப்பாயினதாலுமையவட்கெல்லாம் வளர்க்கவல்லவளெனப்பெயரெய்தியதென்று சொல்லி அவ்வில்வவனத்தெழுந்தருளிய மூர்த்தி தீர்த்தமுதலிய வரலாற்றைப் பவம் நீங்கப் பொழிப்பாக வியம்பிய விக்கதையைப் பத்தியாசப் படித்தவர் கேட்டவர், புத்திரரையுங் கல்விநவரத்தினந்தனந்தானியங்களும் பெருகப்பூமியில் வாழ்ந்து சிவபதம் பெறுவார்கள். அத்தலத்தில் பத்திமிகுந்த பூசுரருக்கமுது சலம் வஸ்திரம் பொன்தாணியமளிப்பவர்பயனை, அரிபிரமனாலுஞ் சொல்வதற்கெளிதல்ல, வேறுதலத்தில் நூறு பிராமணர்க்காறுசுவைப்போசனஞ்செய்வித்தபலன் அத்தலத்தோர் முட்டியளிப்பவர் பலனுக்கீடாகாது. ஆதலால் அத்தலதீர்த்தமூர்த்தி சத்திக்கொப்பாக வெப்புவனத்திலுமில்லை. இத்தலமகத்துவத்தையெழுதியபுத்தகத்தைப் பூசிப்பவர் படிக்கக்கொடுப்பவர் படிப்போர்க்குச்சந்தனந்தாம்பூலமச்சுதம் வஸ்திராங்காதணிமோதிரமளித்துச் சிவிகையினேற்றி நகர் வலம்புரிவித்துச்சமாதாதனஞ்செய்விப்பவர், பூமியில் துன்பயின்றி சுகம்பெறவாழ்ந்து இஷ்டபோகங்களனுபவித்துப்பின்பச்சிவபெருமான்றிருவடி நிழலிற் சார்ந்திருப்பது சத்தியமென்ற சூதபுராணிகரை அருந்தவர் மகிழ்ந்து அருச்சனை முதலியவுபசாரங்கள் செய்துபணிந்து துதிக்கவும், அச்சூதபுராணிகர் மகிழ்ந்தம்முனிவர்களை வாழ்த்தித்தமதாசிரமஞ்சார்ந்தனர்.

எல்லாம்வளர்க்கவல்லவளென்றபெயர்வரவுச சருக்கம்.

முற்றிற்று.

ஆக சருக்கம் க௰-க்கு திருவிருத்தம் ௰அசா.

திருவைகாவூர்ப்புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.